Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 சித்திரை-08 21-04-2005 வியாழக்கிழமை ஓசை 62



கணேசா நகையகம்

தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

இல:123. பஜார் வீதி. வவுனியா. T.P.-024-2222464

இல:194. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம். T.P.-021-2225987

(சி-11478)

## - எரிக்சூல்ஹெய்ம் - சு.ப.தமிழ்ச்செல்வன் சந்திப்பு -

# அரசாங்கத்தின் நிலைப்பாட்டை தமிழ்ச்செல்வன் தேசியத் தலைவர் பிரபாகரனுக்குத் தெரிவிப்பார்!

## புலிகளின் நிலைப்பாடு பின்னரே தெரியவரும்

(கொழும்பு)

**கட்டுநாயக்காவில், நேற்றுநோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சூல்ஹெய்ம் , சுனாமி அனர்த்த மீள் கட்டமைப்புத் தொடர்பாக அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்துத் தெரிவித்த விடயங்களை, அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள், தேசியத்தலைவர் வே. பிரபாகரன் அவர்களுடன் கலந்துரையாடிய பின்னரே இது குறித்து விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு வெளிப்படுத்தப்படும் எனத் தெரியவருகின்றது.**

ஐரோப்பா மற்றும் ஆபிரிக்க நாடுகளுக்கான அரசியல் சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு நேற்றுக் காலை7.25மணியளவில் கொழும்பு திரும்பிய அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் நோர்வேயின் சிறப்புத்தூதுவர் எரிக் சூல் ஹெய்மை காலை 9.00 மணியளவில் கட்டுநாயக்கா விமான நிலைய ஹார்டன் விடுதியில் சந்தித்து பேச்சுக்களை நடத்தினார்.

இதன் போது எரிக்சூல்ஹெய்ம் பொதுக்கட்டமைப்பு தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாடுகுறித்து விளக்கியுள்ளதாக தெரிவிக்கப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஐரோப்பிய பயணத்தை நிறைவு செய்து எரிக் தேசியத்தலைவரை சந்தித்துப் பேசுவார்

### - கொழும்பில் ஊடகவியலாளரிடம் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐரோப்பிய விஜயத்தை முடித்துக் கொண்டு திரும்பிய பின்னர் வன்னி சென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை சந்தித்துப்பேசவுள்ளதாக நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சூல்ஹெய்ம் தெரிவித்தார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கிமை நேற்று சந்தித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைத்த அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மக்களுக்கு வெளிநாட்டு உதவிகளை பகிர்ந்து அளிப்பதற்காக சிறிலங்கா அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்கும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஐரோப்பிய பயணத்தை நிறைவு செய்து சு.ப.தமிழ்ச்செல்வன் தாயகம் திரும்பினார்



(அலுவலக செய்தியாளர்)

ஐரோப்பிய நாடுகளுக்கான அரசியல் பயணத்தை மேற்கொண்டிருந்த அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நேற்று தாயகம் திரும்பினார்.

நேற்றுக்காலை கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வருகை தந்திருந்த அரசியல் துறைப் பொறுப்பாளர் தலைமையிலான குழுவினர் அங்கு நோர்வேத் தூதுவர் எரிக்சூல் ஹெய்முடனான

(12ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சிகள் தொடர்பில் அரசிடம் தெளிவான நிலைப்பாடில்லை

### - அமெரி.உதவி இராஜாங்கஅமைச்சர் றொக்கா

(கொழும்பு)

சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்பாக சிறிலங்கா அரசிடம் தெளிவான நிலைப்பாடில்லை. தெளிவான நிலைப்பாடின்றி சமாதான முயற்சிகளை முன்னெடுப்பது கடினமானதென அமெரிக்காவின் தெற்காசிய பிராந்திய உதவி இராஜாங்க செயலாளர் கிறிஸ்ரினா றொக்கா தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் மத்தியில் நேற்று முன்தினம் பேசிய அவர் மேலும் இது குறித்து தெரிவிக்கை

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளிடம் இடைக்கால நிர்வாகத்தை கையளிக்க வலியுறுத்தி மன்னாரில் இன்று பேரணி

### அரச படைகளின் கெடுபிடிகளுக்கும் கண்டனம்

(மன்னார்)

சிறிலங்கா அரசின் சர்வாதிகாரப் போக்கைக் கண்டித்தும் தமிழீழ விடுதலைப்புலிகளிடம் இடைக்கால நிர்வாகத்தை வழங்கப்பட வேண்டும் எனக்கோரியும்மன்னாரில் இன்று ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடைபெறவுள்ளது.

மன்னார் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் மாவட்டச் சமாசம் இந்த ஆர்ப்பாட்டப் பேரணியை ஒழுங்செய்துள்ளது.

மன்னார் பொது விளையாட்டரங்கில் இன்று காலைபத்து மணிக்கு ஆரம்பமாகும் இந்தப் பேரணி மருத்து

(12ஆம் பக்கம் பார்க்க)

## சுனாமி அனர்த்த பொதுக்கட்டமைப்பை ஜே.வி.பி. திட்டவட்டமாக எதிர்க்கும்!

### - கிறிஸ்டினா றொக்காவிடம் சோமவன்ச வலியுறுத்து

(கொழும்பு)

வடக்கு-. கிழக்கு பொதுக் கட்டமைப்பை எதிர்ப்போம் என ஜே.வி.பி. அறிவித்துள்ளது. அமெரிக்காவின் தெற்காசியாவுக்கான பிரதி ராஜாங்க செயலர் கிறிஸ்டினா றொக்காவை நேற்று ஜே.வி.பி.யின் தலைவர் சோமவன்ச அமரசிங்க சந்தித்துப் பேசிய போது இதனைத் தெரிவித்துள்ளார்.

சோமவன்ச அமரசிங்க தலைமையிலான ஜே.வி.பி.யின் குழுவினர் சுனாமியின் பின்னரான புனரமைப்புக்களை மாவட்ட இணைப்பு அமைப்புக்களின் ஊடாக மேற்கொள்ள முடியுமென றொக்காவிடம் தெரிவித்தனர்.

தமிழீழ விடுதலைப்புலிகள் மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டவர்கள் அல்ல.

எனவே அவர்களிடம் பொதுக்கட்டமைப்பை ஒப்படைக்க முடியாது.

(12ஆம் பக்கம் பார்க்க)

### -துணுக்காய் ஐயன்கன்குளத்தில் அமைந்துள்ள-

## திலீபன் மருத்துவமனை ஆண்டு நிறைவு நிகழ்வில் தேசியத் தலைவருக்கான நினைவுக் கேடயம் வழங்கல்

(மல்லாவி)


துணுக்காய் பிரதேச ஐயன்கன்குளம் பகுதியில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபன் ஞாபகார்த்த மருத்துவமனையின் மூன்றாம் ஆண்டுநிறைவு நிகழ்வு கடந்த திங்கட்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு மருத்துவமனையின் அபிவிருத்திக் குழுத்தலைவர் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வின்போது ஐயன்கன்குளம் மக்கள் சார்பில் தமிழீழத்தேசியத்தலைவருக்கான நினைவுக் கேடயம் வழங்கப்பட்டது. இதன்போது திலீபன் திருவுருவப் படத்திற்கான பொதுச் சுடரினை தமிழீழ மருத்துப்பிரிவைச்சேர்ந்த செல்வி. அருந்தாவும் தமிழீழத்தேசியக் கொடியை அரசியல் துறைதுணைப்பொறுப்பாளர் சோ. தங்கனும் ஏற்றிவைத்தனர்.திலீபனின் திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரினை, தமிழீழ மாவீரர் போராளிகள் குடும்ப நலன்காப்பகப் பொறுப்பாளர் திருக்குமரன் ஏற்றியதைத் தொடர்ந்து மலர் மாலையினை வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம் அணிவித்தார்.

வரவேற்புரையை ஐயன்கன்குளம் அ.த.க.

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ விடுதலைப் போராட்டம் வெல்வது வரலாற்றின் கட்டாயம்

### - நூல் வெளியீட்டு நிகழ்வில் வைகோ



தமிழீழ விடுதலைப் போராட்டம் வெல்வது வரலாற்றின் கட்டாயம் என்று தமிழ்நாட்டின் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் வை.கோ கூறினார்.

தமிழீழ விடுதலைப்புலிகளை ஆதரித்துப் பேசியதற்காக பொடோ சட்டத்தின் கீழ் சிறையில் வாடிய பேராசிரியர் சுப.வீரபாண்டியன் எழுதிய பெரியாரின் இடதுசாரித் தமிழ்த் தேசியம் என்ற நூல் வெளியீட்டு விழாவில் நேற்று முன்தினம் பேசிய வைகோ இதைத் தெரிவித்தார். சுப.வீயின் நூலை வைகோ வெளியிட தந்தை பெரியார் திராவிடர் கழகத்தலைவர் கொளத்தூர் தா.செ. மணி பெற்றுக் கொண்டார்.நிகழ்வில் பேசிய வைகோ, இந்திய-சிறிலங்கா இராணுவ ஒப்பந்தத்தைத் தடுக்க வேண்டும் என்பதற்காக இந்தியத் தலைமை அமைச்சரிடம் தான் மேற்கொண்ட முயற்சிகளை விபரித்தார்.இந்த ஒப்பந்தம் ஏற்பட்

(12ஆம் பக்கம் பார்க்க)

# வரிவிளம்பரம்

## 2007 A/L உயிரியல் வகுப்புக்கள்

இடம்-கேம்பிறிச் கல்லூரி டிப்போ றோட், உதயநகர், கிளிநொச்சி, காலம்-சனி 2-3மணி,5-6மணி,ஞாயிறு-5-6 மணி, ஆசிரியர்- எம்.நேசன் B.SC (H.B), . (சி.11779)

## சிங்கள வகுப்புக்கள்

புதியபிரிவுகள் ஆரம்பம் பிரிவு I-சனி,ஞாயிறு நாட்களிலும், பிரிவு II-செவ்வாய்,வியாழன் நாட்களிலும், வகுப்புக்கள் நடைபெறும். பதிவு மற்றும் சகல விபரங்களுக்கும் நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளவும். நிலவு கணினித் தொழில்நுட்பம், கச்சேரிஅருகாமை,கிளிநொச்சி. (6060)

## சீமெந்துக்கல் விற்பனைக்கு உண்டு

எம்மிடம் தரமானசீமெந்து, மணல் கலவையில் தரமான முறையில் அறுக்கப்பட்ட சீமெந்துக்கல் விற்பனைக்குஉண்டு.அளவு-4”x6”x12.” தொடர்புகளுக்கு:- தமிழ்கடல்,கட்டடப் பொருள் வாணிபம்,155 யாழ் சாலை, கிளிநொச்சி. (5912)

## விற்பனைக்குஉண்டு

எமது நிறுவனத்தில் கீழ்க்கண்ட பொருள் விற்பனைக்கு இருக்கிறது.

மின் இயக்கி,கமிசன் அடிப்படை வெதுப்பகம் மின்பிறப்பாக்கி 10K.V மரதளபாடம். (6065)

## தவறிவிட்டது

சின்னையா சோதிநாதன் 1ஆம் வட்டாரம் முள்ளியவளை என்பவருடைய சிறிலங்கா சாரதி அனுமதிப்பத்திரமும் தமிழீழ சாரதி அனுமதிப்பத்திரமும் சுவிச் சென்ரர் வீதிக்கும்,கட்சன் ரோட் சந்திக்குமிடையில்18.04.2005 ஆம் திகதி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனை அல்லது பொருண்மிய நடுவப்பணியகத்தில் (பண்ணை) ஒப்படைக்கவும் தகவல் சி. சோதிநாதன். (6068)

## பொதுக்கூட்டம்

‘எழு’ கலை இலக்கியப் பேரவையின் பொதுக்கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு இல 143, பரவிப்பாஞ்சான்,கிளிநொச்சியிலுள்ள பேரவையின் தற்காலிக பணிமனையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் ‘எழு’வின் உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு எழு கலை இலக்கிய பேரவைத் தலைவர் கேட்டுள்ளார்.

## விற்பனைக்கு உண்டு

புத்தம் புதிய ஆறுபேர் பயணம் செய்யக் கூடிய அல்லது 500 கிலோ கிராம் எடை இழுக்கக் கூடிய முச்சக்கரவண்டி (ஆட்டோ) விற்பனைக்குண்டு இனம்-Titus தொடர்பு .ச.கனகரத்தினம்,2ஆம் வட்டாரம், முள்ளியவளை. (5832)

## 2007 A/L கணித, விஞ்ஞான பிரிவு வகுப்புக்கள் நடைபெறும் நேரசூசி

பௌதிகவியல் வகுப்பு - வெள்ளி 3.00-4.00 மணி, சனி 8.00-9.00 மணி, 11.00-1.00 மணி (எம்.எஸ்.தவபாலன்), இரசயானவியல் - புதன் 11.00-1.00 மணி, 4.00-5.00 மணி, வியாழன் 11.00-1.00 மணி (எஸ்.சண்), இணைந்த கணிதம் - சனி 2.00-3.00 மணி, 5.00-6.00 மணி, ஞாயிறு 4.00-5.00 மணி (எஸ்.சிறிதரன்), உயிரியல்- சனி 2.00-3.00 மணி, 5.00-6.00 மணி, ஞாயிறு 5.00-6.00 மணி (எம்.நேசன்) இடம்:- கேம்பிறிச் கல்லூரி, கிளிநொச்சி. (நிர்வாகம்) (சி.11780)

## நன்றி தெரிவித்தல்

14.04.2005 ஈழநாதம் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட காணாமல் போன கையடக்கத் தொலைபேசியை கண்டெடுத்து ஈழநாதம் பணிமனையில் ஒப்படைத்த 3 ஆம் யுனிற் யோகபுரம் மல்லாவியைச் சேர்ந்த துஷ்யந்தன் என்பவருக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.(6066)

## விற்பனைக்குஉண்டு

க.பொ.த (சா.தர)ப் பரீட்சை -2004 டிசம்பர் பெறுபேறு மீளாய்வு செய்வதற்கான விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுக்கொள்ள பிள்ளையார் புத்தகசாலை.கிளிநொச்சி.(சி.11784)

| 2007 A/Lகலை வர்த்தக பிரிவு வகுப்புக்கள்நடைபெறும் நேரசூசி | |
|---|---|
| தமிழ் வகுப்பு:- திரு.ரமேஸ் | சனி-10-11 |
| புவியியல் வகுப்பு-திங்கள்,புதன் திரு.ஸ்ரீஸ்குமார் | 4-5 4-5 |
| இந்துநாகரிகம் வகுப்பு-சனி திரு.றமேஸ் | 2-3 |
| கணக்கீடு வகுப்பு-திங்கள் திரு.சிவப்பிரகாஸ் | 4-5 |
| வணிகக்கல்வி வகுப்பு-சனி,ஞாயிறு திரு.அகிலன் | 1-6 , 8-9 |
| பொருளியல்வகுப்பு-திங்கள்,வெள்ளி திரு.சாந்தன் | 4-5 , 4-5 |
| இடம்:-கேம்பிறிஜ் கல்லூரி, உதயநகர் கிளிநொச்சி. | நிர்வாகம், (11781) |

## சிறுநீரகம் தேவை

18-55 வயதிற்குட்பட்டவரும், $O^{+}$ இரத்தப் பிரிவுடையவரின் சிறுநீரகம் தேவைப்படுகிறது. விரும்பி வழங்குபவருக்கு கனடாவிற்குரிய வதிவிட உரிமையும், (விசா) தகுந்த சன்மானமும் வழங்கப்படும். தொடர்புகளுக்கு விளம்பர இல 6069 ஈழநாதம் பணிமனை கிளிநொச்சி.

(6069)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

## வெளிவாரிப் பரீட்சை

### வணிக முதற் தேர்வு 2002 & 2003

மேற்படி இரு கல்வியாண்டுகளுக்குமான தேர்வு 16.05.2005 தொடக்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஆரம்பமாகின்றது. நேரஅட்டவணைகளையும், பரீட்சை அனுமதி அட்டைகளையும்,அலுவலக நேரத்தில் 09.05.2005 முதல் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு 021-2223612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளலாம்.

துணைவேந்தர்,
19.04.2005

(சி.11802)

# விண்ணப்பம் கோரல்

முல்லைத்தீவு மாவட்டத்தில் உலக உணவுத்திட்டத்தின் கீழ் இயங்கிவரும் களஞ்சியத்திற்கான கீழ்க்குறிப்பிடப்படும் பதவிகளுக்கு தற்காலிக அடிப்படையில் கடமையாற்றுவதற்கு முல்லைத்தீவு மாவட்டத்தை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட கீழ் குறிப்பிடப்படும் தகைமை உடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. களஞ்சியக்காப்பாளர் உதவிக் களஞ்சியக்காப்பாளர்**

**தகைமைகள்**

1. 25 வயதிற்கும் 40 வயதிற்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
2. கல்வித்தகைமை.
   - I க. பொ. த(சாதாரணதர)-தமிழ்,கணிதம் உட்பட 06 பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
   - II க. பொ. த(உயர்தரம்)-03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
   - III ஆங்கிலத்தில் உரையாற்றும், எழுதும் ஆற்றல் உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**02. எழுதுவினைஞர்**

**தகைமைகள்:-**

1. 18 வயதிற்கும் 40 வயதிற்கும் இடைப்பட்டவராக இருத்தல்.
2. கல்வித்தகைமை.
   - I க. பொ. த(சாதாரணதர)-தமிழ்,கணிதம் உட்பட 06 பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
   - II க. பொ. த(உயர்தரம்)-03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
3. ஏனைய தகைமைகள் குறிப்பிடப்பட வேண்டும்.

மேற் கூறப்பட்ட தகைமைகளுடைய விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ் விண்ணப்பங்கள் சுயவிபரம் அடங்கலாகத் தயாரித்து எதிர்வரும் 2005.04.27 ஆம் திகதிக்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக அரசாங்க அதிபர், திட்டமிடல் பணிமனை,கச்சேரி, முல்லைத்தீவு என்ற முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும். இத்திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

திருமதி. இமெல்டா சுகுமார்,
அரசாங்க அதிபர்,
முல்லைத்தீவு மாவட்டம்.

(சி.11802)

# மொத்த விற்பனைச் சந்தை அமைத்தல் அறிவித்தல்

கிளிநொச்சி மாவட்ட விவசாய உற்பத்தியாளர்களின் வசதி கருதி 25.04.2005 ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு ஏற்கனவே இயங்கிய கிளிநொச்சி மத்திய சந்தை அமைவிடத்தில் மொத்த விற்பனைச்சந்தை ஆரம்பிக்கப்படும் என்பதை சகல விவசாய உற்பத்தியாளர்களுக்கும், வணிக நிறுவனங்களுக்கும் அறியத்தருகின்றோம். இந்த மொத்த விற்பனைச் சந்தை முதன் முறையாக திங்கள் ஆரம்பித்ததும் தொடர்ந்து வாராந்தம் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் நடைபெறும்.

இச்சந்தை கடந்த இருபது ஆண்டுகளுக்குப் பின்பு முதன்முதலாக ஆரம்பிக்கப்படவுள்ளது. இதன் மூலம் தென்னிலங்கை வணிகர்களும், வட இலங்கை உற்பத்தியாளர்களும் பெரும் பயனை அடைய முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இச்சந்தையைச் சகலரும் பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தி. இராசநாயகம்,
அரசாங்க அதிபர்,
கிளிநொச்சி. மாவட்டம்

(சி.11649)

# தமிழீழப் போக்குவரவுக்கழகம்

## கணக்குப் பதிவாளர் பணிக்கான விண்ணப்பம் கோரல்

பின்வரும் தகைமையுடைய இருபாலோரும் கணக்குப் பதிவாளர் பணிக்கான விண்ணப்பங்களுடன் நேரில் வருகை தருமாறு வேண்டுகின்றோம்.

தகைமைகள்:-

01.கல்வித்தகைமை:- க. பொ. த உயர்தரத்தில் வர்த்தகப்பிரிவில் கணக்கியல் உட்பட மூன்று பாடம் சித்தியடைந்திருத்தல்.

02.அகவை:- 21 தொடக்கம் 30 வரை.

குறிப்

01. சம்பளம்:- நிதித்துறை சம்பளத்திட்டத்திற்கு அமைவாக வழங்கப்படும்.
02. விண்ணப்பதாரருக்கான நேர்முகத் தேர்வு:04.05.2005 ஆம் நாள் விசுவமடு றெட்பானா ஒளிநிலா திரையரங்கிற்கு அருகில் உள்ள பணிமனையில் நடைபெறும்.
03. நேர்முகத் தேர்வுக்கு வருகை தருவோர் தங்கள் கல்வித்தகைமை. அகவை என்பவற்றை உறுதிப்படுத்தும் சான்றுகளோடு வருக.
04 அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

*முகாமையாளர்,*
*ஆளணி ஆளுகைப்பகுதி,*
*தமிழீழப் போக்குவரவுக் கழகம்,*
*நடுவப்பணிமனை,*
*விசுவமடு.*

(சி.11650)

போராட்டத்தின் போது சேதமடைந்த

# ஜப்பான் தூதரகத்தை பழுதுபார்க்க சீனஅரசாங்கம் சம்மதம் தெரிவிப்பு

(பீஜிங்)

ஜப்பானுக்கு எதிரான போராட்டங்களின் போது சேதமடைந்த ஜப்பான் தூதரகத்தை பழுது பார்த்துத் தரத் தயாராக இருப்பதாக சீனா அறிவித்துள்ளது. தகவல்களை திரித்துக் கூறிய ஜப்பான் வரலாற்றுப் பாடப் புத்தகத்தை எதிர்த்து கடந்த மூன்று வாரங்களாக சீனாவில் நடந்த வன்முறைச் சம்பவங்களில் பீஜிங்கிலுள்ள ஜப்பான் தூதரகம் சேதமடைந்தது.தூதரகத்தின் இருபது ஜன்னல்கள் உடைக்கப்பட்டன.

இப்படி உடைக்கப்பட்ட ஜன்னல்களைப்பழுது பார்த்துத்தரத் தயாராக இருப்பதாக சீனா அறிவித்துள்ளது.

இழப்பீடு கொடுப்பீர்களா என்று கேட்டபோது “ சேதத்தை சரி செய்து கொடுக்கப் போகிறோம்” என்று அதிகாரி பதில் அளித்தார்.

இதுபற்றி ஜப்பான் தூதரக அதிகாரி ஒருவர் கூறுகையில்; நஷ்ட ஈடு தரும்படி ஜப்பான் கோரியது இதற்கு சீனா இன்னும் பதில் தெரிவிக்கவில்லை என்று கூறினார்.




இந்தியாவில் அன்னை திரேசாவினால் நிறுவப்பட்ட கன்னியாஸ்திரிமட கன்னியாஸ்திரி ஒருவரால் புதிய போப்பாண்டவரிற்கான வரவேற்புச் செய்தி ஒன்று கரும்பலகையில் எழுதப்பட்டுள்ளது.



ஈராக் பொலிசார் பாக்தாத்தின் தெற்கே 30 கி.மீ அப்பாலுள்ள மடோயின் எனுமிடத்தில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர்.

# அமெரிக்க இராணுவம் தாக்குதல்; ஆப்கானில் 8 தீவிரவாதிகள் பலி!

(காபுல்)

**ஆப்கானிஸ்தானில் தீவிரவாதிகளுக்கும், அமெரிக்க இராணுவத்தினருக்கும் இடையே நடந்த சண்டையில் எட்டு தலிபான்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். 16 தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

ஆப்கானிஸ்தானில் தலிபான் இயக்கத்தினர் ஆட்சி நடத்திய போது அவர்கள் பின்லேடனுக்கு அடைக்கலம் கொடுத்து பக்கபலமாக இருந்ததாக்கூறி அமெரிக்கா அந்த நாட்டின் மீது தாக்குதல் நடத்தி தலிபான் ஆட்சியை அகற்றியது. ஆட்சி கவிழ்ந்ததும் தலிபான்கள் தலைமறைவானார்கள். அவர்கள் பதுங்கி இருந்து அமெரிக்க இராணுவம் மீது தாக்குதல் நடத்தி வருகிறார்கள்.

காபூல் மாநிலம் டாய்சோபன் மாவட்டத்தில் இராணுவவாகனங்கள் மீது தலிபான் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்த முயன்றனர். இதைத் தொடர்ந்து இரு தரப்புக்கும் இடையே மோதல் வெடித்தது. அமெரிக்க விமானப்படையும் வரவழைக்கப் பட்டது. அவை தீவிரவாதிகள் மீது குண்டுத்தாக்குதல் நடத்தின. இதில் எட்டு தலிபான் தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். இராணுவத்தரப்பில உயிர்ச் சேதம் ஏதும் இல்லை. கைதுசெய்யப்பட்ட 16 தீவிரவாதிகளில் நான்கு பேர் காயமடைந்துள்ளனர் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அமெரிக்க உலங்குவானூர்தி தொழில் நுட்ப கோளாறு காரணமாக சண்டை நடந்த இடத்தில் தரை இறக்கப்பட்டது .

தீவிரவாதிகள் அதிகமாக இருக்கும் மாநிலங்களில் காபூலும் ஒன்றாகும்.

கடந்த வாரம் பக்டியா நகரில் இதேபோல நடந்த மோதலில் 12 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# நாளை இந்தோனேஷியாவில் ஆசிய, ஆபிரிக்க உச்சிமாநாடு

(ஜகார்த்தா)

ஆசிய ஆபிரிக்க நாட்டுதலைவர்களின் உச்சி மாநாடு நாளை வெள்ளிக்கிழமை இந்தோனேஷியாவில் ஆரம்பமாகின்றது. உலக நாடுகளின் மாநாடு இந்தோனேஷியாவில் பாண்டுங் நகரில் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு கூடியது. இதன் ஐம்பதாம் ஆண்டு விழாவையொட்டி இந்த மாநாடு நடக்கிறது.

இதில் இந்தியா, சீனா, பாகிஸ்தான், ஜப்பான், மியான்மார், தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்கிறார்கள் மொத்தமாக ஐம்பது நாடுகள் பங்குபற்றுகின்றன. இந்த மாநாட்டில் ஐ.நா. பொதுச் செயலாளர் கொபி அனான் கலந்து கொள்கிறார் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளும் ஜப்பான் பிரதமர் கொய்சுமியும், சீனா அதிபர் ஹியுஜிண்டாவோவும் சந்தித்துப் பேசி கருத்து வேறுபாடுகளை களைந்து கொள்ள முன்வர வேண்டுமென்று கொபி அனான் கூறினார்.

# பெனாசிரின் கட்சியினரை விடுதலை செய்ய மனித உரிமைக்குழு வலியுறுத்தல்

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாசிரின் பாகிஸ்தான் மக்கள் கட்சியைச் சேர்ந்த ஆயிரக் கணக்கானவர்களை உடனடியாக சிறையில் இருந்து விடுதலை செய்ய வேண்டுமென்று மனித உரிமைக்குழு கோரியுள்ளது.


பெனாசிரின் கணவர் சர்தாரி எட்டு ஆண்டுகள் சிறையில் இருந்த பின்னர் கடந்த நவம்பர் மாதம் பிணையில் விடுதலை செய்யப் பட்டார். அவர் டுபாய் சென்று தன் குடும்பத்தினரைப் பார்த்துவிட்டு நாடு திரும்பினார். அப்போது அவரையும் கட்சிக்காரர்களையும் முஷாரப் அரசு கைது செய்தது.

கைது செய்யப்பட்ட கட்சிக் காரர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று பாகிஸ்தான் அரசை மனித உரிமைக்குழு வலியுறுத்தியுள்ளது.

ஜனநாயகப் பாதையை நோக்கி பாகிஸ்தான் நடைபோடுவதாக முஷாரப் கூறிவருகிறார். ஆனால் அமைதியாகக் கூடுவதை ஜனநாயகம தடை செய்யாது என்று மனித உரிமைக்குழுவின் ஆசியா இணைப் பாளர் பிராட் ஆடம்ஸ் கூறியுள்ளார்.



நேபாள மன்னர் ஞானேந்திரா இந்தோனேஷியாவிற்குப்புறப்பட முன்னர் காத்மண்டு விமானநிலையத்தில் வைத்து நேபாள அதிகாரிகளால் வாழ்த்தப்படுகின்றார்.



ஜகார்த்தா சர்வதேச மாநாட்டு மையத்திற்கு அண்மையாகவுள்ள பாலமொன்றினுள் காவல் கடமையில் ஈடுபட்டிருக்கும் இந்தோனேஷியப் படையினர். இது ஆசிய ஆபிரிக்க உச்சி மாநாடு நடைபெற ஏற்பாடாகியுள்ள பிரதேசமாகும்.

# மலைப்பாதையில் சென்ற பஸ் கவிழ்ந்ததில் சீனாவில் 27 பேர் பலி; 4பேர் காயம்

(பீஜிங்)

சீனாவில் மலைப்பாதையில் சென்ற பேருந்து கவிழ்ந்ததில் அதில் பயணம் செய்த 27 பேர் பலியாகி உள்ளதுடன், நான்கு பேர் காயமடைந்துள்ளனர்.

சோங்கிங் என்ற இடத்தில் மலைப்பாதையில் சென்ற பேருந்து ஒன்றில் 31 பேர் பயணம் செய்தனர் பேருந்து ஒரு பாலத்தின் மீது சென்ற போது அது பாதையில் இருந்து விலகிப்பள்ளத்தில் கவிழ்ந்ததில் இவ்விபத்து இடம் பெற்றுள்ளது.

உலகிலேயே சீனாவில்தான் அதிக அளவில் சாலை விபத்துக்கள் இடம் பெறுகின்றன. கடந்த ஆண்டு ஒரு லட்சத்து 7ஆயிரம் பேர் இவ்வாறான விபத்துக்கள் மூலம் பலியாகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜப்பானில் நேற்று நில நடுக்கம்

ஜப்பானின் தென்பகுதியில் நேற்றுக்காலை நில நடுக்கம் ஏற்பட்டது. காலை 6.11 மணிக்கு ஏற்பட்ட இந்த நில நடுக்கம் ரிக்டர் அளவில் 5.8 புள்ளிகளாக பதிவானது.இரண்டு முறை அடுத்தடுத்து இந்த நிலநடுக்கம் ஏற்பட்டதால் டோக்கியோ நகரின் தென் பகுதியின் புகோகா நகரம் அதிர்ந்தது.

ஒரு சில வீடுகள் இடிந்து விழுந்தன. இதில் 6 பேர் படுகாயம் அடைந்தனர். ஆனால் உயிர்ச் சேதம் ஏற்பட்டதாகத் தகவல் இல்லை. ஆனாலும் சுனாமி பீதியில் மக்கள் உயரமான இடங்களை நோக்கி ஓடினர். ஆனால் சுனாமி அலைகள் எதுவும் உருவாகவில்லை.

கடந்த மார்ச் மாதமும் இதே பகுதியில் நில நடுக்கம் ஏற்பட்டது. இதில் ஒருவர் பலியானார். ஏராளமான வீடுகள் இடிந்து விழுந்ததில் ஐநூற்றிற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஈகுவடோர் நாட்டில் உச்ச நீதிமன்றம் கலைப்பு

ஈகுவடோர் நாட்டில் சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட நீதித்துறை சீர்திருத்தங்களை எதிர்த்து மக்கள் நடத்திய ஆர்ப்பாட்டங்களை அடுத்து உச்ச நீதிமன்றத்தை கலைக்க நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்தது. இது தொடர்பாக எதிர்க்கட்சிகள் கொண்டுவந்த தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

கடந்த டிசம்பரில் ஆளுங்கட்சி கூட்டணி நீதித்துறை சீர்திருத்தம் குறித்த தீர்மானத்தை நாடாளுமன்றம் மூலம் நிறைவேற்றியது. இதற்கு எதிர்ப்பு எழுந்தது நீதித்துறையை அரசு தன் கட்டுப்பாட்டில் கொண்டுவர முயற்சிப்பதாக குற்றச்சாட்டுகள் எழுந்தன. எதிர்க்கட்சியினர் அரசை எதிர்த்து ஆர்ப்பாட்டத்தில் இறங்கினர்.



வட அயர்லாந்தில் சின்பெயின் சனாதிபதி கெரிஅடம்ஸ்(இடம்) தனது கட்சிச் சகாக்களான மிச்செல் லாப்லின்(மத்தி) மாட்டின்கைன்னெஸ் (வலம்) ஆகியோருடன் செய்தியாளருக்குக் கருத்து தெரிவிக்கின்றனர் இக்குழுவினர் நடைபெறவுள்ள பிரித்தானிய தேர்தலுக்குத் தம்மைத் தயார்படுத்துகின்றனர்.


# தென்னை அபிவிருத்திச் சபை அதிகாரிகள் வன்னியில்

# த.பொ.மே. நிறுவன அதிகாரிகளுடன் கலந்துரையாடல்

- தென்னை அபிவிருத்தி குறித்து ஆராய்வு


(அலுவலக செய்தியாளர்)

**தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் அழைப்பையேற்று வன்னிக்கு வருகைதந்திருக்கும் தென்னை அபிவிருத்திச் சபைத் தலைவர், அதிகாரிகள் மற்றும் விஞ்ஞானிகள் உள்ளிட்ட குழுவினர் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் உள்ளிட்டவர்களைச் சந்தித்து தென்னை அபிவிருத்தி குறித்து கலந்துரையாடியுள்ளனர்.**



தென்னை அபிவிருத்திச் சபைத் தலைவர் கலாநிதி ஜெயந்த குணதிலக, பிரதி பொது முகாமையாளர் அபயசேகரா, உதவிப் பொது முகாமையாளர் காரியவாசம், தென்னை ஆராய்ச்சி நிறுவன விஞ்ஞானிகள் கலாநிதி திருமதி பண்டாரநாயக்க கலாநிதி லலித் பெரேரா ஆகியோரே வன்னிக்கு விஜயம் செய்து தென்னை அபிவிருத்தி சம்பந்தமான விரிவான கலந்துரையாடலில் ஈடுபட்டனர். த.பொ.மே நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன் தலைமையில் நிறுவன கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் காலை 10.30 மணியளவில் கலந்துரையாடல் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் வவுனியா மாவட்டஅரச அதிபர் சண்முகம், யாழ். மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் தென்னை அபிவிருத்திச் சபையின் பிராந்தி முகாமையாளர் தெய்வேந்திரம் த.பொ.மே நிறுவனத் துணைப் பொறுப்பாளர் சு.சின்னண்ணை,நிறுவனத் திட்டமிடல் அலுவலர் சி.அமிர்தலிங்கம், தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் எனப் பலரும் கலந்து கொண்டு ஆக்கபூர்வமான கருத்துக்களைத் தெரிவித்தனர். அத்துடன் பளையிலுள்ள விதை தேங்காய்களைத் தெரிவு செய்யும் தோட்டங்களைப் பார்வையிட்டனர். நேற்று முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள விதை தேங்காய்களைத் தெரிவு செய்யும் தோட்டங்களைப் பார்வையிட்டுள்ளனர். சுனாமியால் பாதிக்கப்பட்ட தெங்கு உற்பத்தியாளர்களுக்கு அளம்பில் பிரதேசத்தில் தென்னங் கன்றுகளை வழங்கவுள்ளதுடன் மாதிரி நடுகைகளையும் மேற்கொள்வதற்குத் திட்டமிட்டுள்ளது. (சோ)



கடந்த 12ஆம் திகதி முல்லை மாவட்ட க.பொ.கூ. சங்க சமாசத்தின் ஊடாக நெதர்லாந்து தமிழர் உரிமை மையத்தின் கிளைப் பொறுப்பாளர் சி. இந்திரன் சுனாமியால் தந்தையை இழந்த பிள்ளைகளுக்கு ரூபா 10,000 வைப்பிலிட்ட புத்தகம் வழங்குவதைக் காணலாம். (20)

## ஊழியர் பற்றாக்குறையால் தபால் விநியோகம் சீரில்லை

(விசுவமடு)

விசுவமடு பகுதியில் தபால் விநியோகம் சீரின்மையால் மக்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டியவர்களாகவுள்ளனர்.

இத் தபாலகத்திற்கு ஊழியர்கள் போதியளவு இல்லாமையே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது. தபாலகத்தில் முன்னர் இரண்டு ஊழியர்கள் கடமையாற்றி வந்தனர். அவர்களில் ஒருவர் ஓய்வு பெற்று விட்டார். அதன் பின்னர் ஒரு ஊழியரே கடமையாற்றுகின்றார். இவர் தர்மபுரம், தேராவில்,மயில்வாகனபுரம் போன்ற சுமார் 20 மைல் சுற்றளவிற்கு மேல் தபால் விநியோகம் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதன் காரணமாகவே தபால் விநியோகத்தில் காலதாமதம் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பாக விசுவமடு தபாலகத்திற்கு முறையீடு மேற்கொண்ட போதிலும் எதுவித பயனும் இல்லை.

இது தொடர்பாக முல்லை மாவட்ட தபால் அத்தியட்சகராயினும் கவனமெடுத்து தபாலகத்திற்குத் தேவையான ஊழியர்களை நியமிக்க நடவடிக்கை எடுத்து தபால் விநியோகத்தைச் சீர் செய்ய வேண்டுமென மக்கள் கோரியுள்ளனர். (46)

## மின்சார விநியோகம் சீரின்மையால் கணினிகள் பழுதடைந்துள்ளன

கட்டடத் திணைக்கள பிரதம பொறியியலாளர் –

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கச்சேரியில் ஏழு கணினிகளும், கிளிநொச்சி கட்டடத் திணைக்களத்தில் இரண்டு கணினிகளும் மின்சார விநியோகம் சீரின்மையால் பழுதடைந்துள்ளதாகக் கட்டடத் திணைக்கள பிரதம பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி நகரில் இலங்கை மின்சார சபையினரால் மின் பிறப்பாக்கிகள் மூலம் வழங்கப்படும் மின் விநியோகம் சீராக நடைபெறாது இடையிடையே தடங்கல்கள் ஏற்படுகின்றது. இந்த மின் விநியோகம் சீரின்மையலேயே கிளிநொச்சி நகரில் இயங்கும் அரச திணைக்களங்களில் பயன்படுத்தப்படும் கணினிகள் பல பழுதடைதுள்ளதாக அவர் தெரிவித்தார்.

## பாதிக்கப்பட்ட பெண்களுக்கு தையல் இயந்திரம் வழங்கல்

(திருகோணமலை)

கிண்ணியாப் பிரதேசத்தில் கடற்கோளினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான தையல் இயந்திரம் வழங்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை கிண்ணியா அல் அக்ஸா கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

கிண்ணியா செரண்டிப் பவுண்டேஷன் அனுசரணையுடன் இடம்பெற்ற இந் நிகழ்வில் 80 தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன. இவை அப்துல் அஸிட்முகமட் அனஸ் என்ற அன்பரால் நன்கொடையாக வழங்கப்பட்டது.

இதன் போது இலங்கைக்கான மலேசிய நாட்டுத் தூதர் ஜனாபா நஸீராஹீசேன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு தையல் இயந்திரங்களை வழங்கினார்.விசேட விருந்தினராக திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் காமினி ரொட்ரிகோ பங்கு பற்றி தையல் இயந்திரங்களைப் பயனாளிகளுக்கு வழங்கினார். நிகழ்வுக்குக் கிண்ணியா உலமா சபையின் தலைவரும், கிண்ணியா சமாதானக் குழுவின் தவிசாளருமான கே.உதுமான் லெப்பை தலைமை வகித்தார். மலேசியாவின் தூதர் நஸீரா ஹீசேன் பேசும் போது கடற்கோளினால் பாதிக்கப்பட்ட கிண்ணியா மக்களின் வாழ்வை இயல்பு நிலைக்குக் கொண்டு வருவதற்கு மலேசியா அரசின் உதவியைப் பெற்றுத் தருவதாக உறுதியளித்தார். அரசாங்க அதிபர் காமினி ரொட்ரிக்கோ கருத்துத் தெரிவிக்கையில் கடற்கோளினால் திருகோணமலை மாவட்டத்தில் கிண்ணியாப் பிரதேசமே மிக மோசமாகப் பாதிக்கப்பட்டதெனவும் கடற்கோளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் கட்டம் முடிந்து இப்போது புனர் நிர்மாணப் பணிகள் ஆரம்பமாகின்றன. இப் பணிகள் அரசாங்கத்தின் சட்டஒழுங்கு முறைகளுக்கமைய மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.இதன் போது உதவி பொலிஸ் லியனபத்திரான இராணுவ அதிகாரிகளு வராட்சி அமெரிக்கத் தொண்டர் நிறுவன அதிகாரி வால்டர் பெரியர் ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றினர். செரண்டிக் பவுண்டேஷன் தவிசாளர் எம்.ஐ.எம் ஜமால்தீன் வரவேற்புரையை நிகழ்த்தினார். செரண்டி பவுண்டேஷன் செயலாளர் நாயகம் எஸ்.ரீம்.நஜீம் நன்றியுரை நிகழ்த்தினார். (25)

## முல்லை. வர்த்தக சங்கத்திற்கு கியூடெக் நான்கு மில்லியன் ரூபா நிதியுதவி

(முல்லைத்தீவு)

முல்லை வர்த்தக சங்கத்திற்கு கியூடெக் நிறுவனம் கடந்த திங்கட்கிழமை நான்கு மில்லியன் ரூபா வழங்கியுள்ளது. சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு மூன்று மாதங்கள் கடந்த நிலையில் சுழற்சி முறையிலான கடன் திட்டம் மூலமே கியூடெக் நிறுவனம் தற்போது இந் நிதியினை வழங்கியுள்ளது. இந்த நிதியினை வர்த்தக சங்கத்தினரால் அந்தந்த தொழிலுக்கு ஏற்ற வகையில் பகிர்ந்தளிக்கப்பட்டதுடன் முதன் முதலாக வர்த்தகர்களுக்கு இப் பணமே கிடைத்ததாகவும், ஒரு சில வர்த்தகர்களுக்கு இன்னமும் நிதியுதவி வழங்க வேண்டியுள்ளதால் கியூடெக் நிறுவனம் தொடர்ந்து உதவி வழங்க விருப்பதாகவும் கியூடெக் நிறுவனத்தினர் தெரிவித்தாக முல்லை. வர்த்தக சங்கத்தினர் தெரிவித்தனர். இந் நிதியினை வழங்கிய கியூடெக் நிறுவனத்திற்கு வர்த்தக சங்கத்தினர் தமது நன்றியினைத் தெரிவித்துள்ளனர். (20)

## நடுகல் திரைநீக்கம்

27.11 1999 அன்று முல்லைக் கடற்பரப்பில் படகு விபத்தின் போது வீரச்சாவடைந்த கடற்புலி கப்டன் தமிழிசை அவர்களின் நடுகல் திரைநீக்கம் கடந்த ஞாயிற்றுக்கிழமை விசுவமடு துயிலுமில்லத்தில் நடைபெற்றது.

இவரது திருவுருவப்படம் இராமநாதபுரத்திலுள்ள இவரது தற்காலிக இல்லத்திலிருந்து எடுத்துவரப்பட்டு வட்டக்கச்சி மாவீரர் மண்டபத்தில் வீரவணக்கக் கூட்டம் வட்டக்கச்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் சுடர் தலைமையில் நடைபெற்றது. பொதுச்சுடரினை கிளி.மாவட்ட அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் பூவிழி ஏற்றிவைத்தார். மாவீரரின் திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரையும், மலர்மாலையையும் அவரின் சகோதரன் கண்ணன் அணிவித்தார். தொடர்ந்து வீரவணக்க உரையினை தமிழீழ கடற்படை மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் பூரணியும், கிளி. மாவட்ட அரசியல்துறைப் மகளிர் பொறுப்பாளர் பூவிழியும் நிகழ்த்தினார்கள். பின் அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் திருவுருவப்படம் எடுத்துச் செல்லப்பட்டது.

## தங்க நகைகளை கண்டெடுத்து ஒப்படைத்த மாணவனுக்கு பாராட்டு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கணேசபுரம் வீதியிலிருந்து தங்க நகைகளும்,ஒரு தொகைப் பணமும் பாடசாலை மாணவன் ஒருவரால் கண்டெடுக்கப்பட்டு கிளி. காவல் பணிமனையில் கையளிக்கப் பெற்றதுடன் காவல் துறையினரால் மேற்படி பொருட்கள் உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

மேற்படி சம்பவம் கடந்த சனியன்று நடைபெற்றது. கிளிநொச்சி மகா வித்தியாலய ஒன்பதாம் ஆண்டு மாணவனான செல்வன் யோ. கௌதமன் என்பவரே மேற்படி தங்க நகைகளையும், ஒரு தொகைப் பணத்தையும் வீதியில் கண்டெடுத்து உரியவர்களிடம் ஒப்படைக்க உதவியவராவார்.

இம் மாணவரது முன் மாதிரியான செயற்பாட்டினை கிளிநொச்சிக் காவல் பணிமனைப் பொறுப்பதிகாரியும், பாடசாலை அதிபர், ஆசிரியர்களும் பாராட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## கலந்துரையாடல்

(அலுவலக செய்தியாளர்)

மல்லாவியில் தமிழீழ மாணவர் அமைப்பால் நடாத்தப்படும் மேஜர் முரளி கணினிப்பயிற்சி நிலையத்தில் இதுவரை காலமும் நடைபெற்ற பயிற்சிகளில் பங்கு பற்றி சித்தியடைந்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு வெகு விரைவில் நடைபெறவுள்ளது. எனவே இம் மாணவர்களுடனான நேரடிக் கலந்துரையாடல் ஒன்று எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை 10.00 மணிக்கு மல்லாவி கணினிப்பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது. இதில் அனைத்து மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் நளன் வேண்டுகை விடுத்துள்ளார். (சோ)

## இயல், இசை, நடன விழிப்புணர்வு கருத்தூட்டல் தொடர்பான கலந்துரையாடல்

(முல்லைத்தீவு)

துணுக்காய், பாண்டியன் குளம், மாங்குளம் ஆகிய மூன்று பிரதேசத்திற்குட்பட்ட கலைஞர்கள் ஆக்க கர்த்தாக்கள்,படைப்பாளிகள் அனைவருக்குமான கலந்துரையாடல் இன்று காலை பத்து மணிக்கு மல்லாவி அரசியல்துறைச் செயலக பாரதி ஒன்று கூடல் மண்டபத்தில் நடை பெறவுள்ளது. இந்நிகழ்வில் இயல், .இசை,நடன விழிப்புணர்வுக் கருத்தூட்டலும் பிரதேச ரீதியாக கலைஞர் குழுக்களை அமைப்பதற்கான கருத்தூட்டல்களும் இடம்பெறவுள்ளதால் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு துணுக்காய் பிரதேச அரசியல்துறையினர் தெரிவித்துள்ளனர். (24)

# சண்டிலிப்பாய் பிரதேசத்தில் இன்று அரச எதிர்ப்புப் பேரணி

(அலுவலக செய்தியாளர்)

**சண்டிலிப்பாய் சங்கானைப் பிரதேச பொது அமைப்புக்களின் ஒன்றியங்களினால் அரச எதிர்ப்புப் பேரணி ஒன்று இன்று நடாத்தப்படவுள்ளது.**

அரசியல் பணியில் ஈடுபட்டுள்ள போராளிகள் மீதான படுகொலைகள், தாக்குதல்கள் என்பவற்றைக் கண்டித்தும் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கக் கோரியும் விடுதலைப்புலிகளுடன் இணைந்த பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்த வலியுறுத்தியும் இப் பேரணி நடத்தப்படவுள்ளது.

காலை 10.00 மணிக்கு கட்டுடைச்சந்தியில் இருந்து ஆரம்பமாகும் இப்பேரணி சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் சென்றடையும். அங்கு பிரதேச செயலரிடம் மகஜர் கையளிக்கப்படவுள்ளது. இதேவேளை இன்று தீவகம், வேலணை துறையூரிலிருந்து வங்களாவடிச்சந்தியில் அமைந்துள்ள பிரதேச செயலகம் வரையும் மற்றுமொரு பேரணி நடத்தப்படவுள்ளதும் குறிப்பிட்டத்தக்கது. (சு)

## புனிதநகர் பகுதி மக்கள் மழை நேரத்தில் அவல வாழ்க்கை

நாகர் கோவில் இராணுவ உயர்பாதுகாப்பு வலயம் காரணமாக இடம் பெயர்ந்து மீண்டும் சுனாமி கடல் அனர்த்தத்தின் போது பாதிக்கப்பட்ட மக்கள் கற்கோவளம் புனிதநகர் பகுதியில் குடியேற்றப்பட்டுள்ள வீட்டுத்திட்டத்தில் மழை காலத்தில் குடியிருக்க முடியாத நிலையில் இருப்பதாக கூறுகின்றார்கள்.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயத்தின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ள இவ்வீட்டுத்திட்டம் முழுமைபெறாமையினால் மழை பெய்யும் போது தற்காலிகமாக போடப்பட்ட சமயலறைக்குள் ஒதுங்க வேண்டிய அவலம் காணப்படுவதாகவும் கூறுகின்றார்கள்.

வீடுகளின் முகட்டுக் கூரைகள் போடப்படாமலும் கதவுகள், யன்னல்கள் போடப்படாமலும் காணப்படுவதனால் மழை காலத்தில் குடியிருக்க முடியாத நிலைமை காணப்படுவதாக கூறப்படுகின்றது. நூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் இப்பகுதியில் வசிக்கின்றமை குறிப்பிட்டத்தக்கதாகும். (41)

## தமிழீழ தொலைக்காட்சி பணிநிலைக்கு விண்ணப்பித்தோருக்கு நேர்முகத் தேர்வு

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ தொலைக்காட்சி பணிநிலைக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகத்தேர்வுகள் நடைபெறவுள்ளதாக தமிழீழ தொலைக்காட்சி சேவை இயக்குனர் அறிவித்துள்ளார்.

வன்னிப்பகுதியில் விண்ணப்பிதவர்களுக்கான நேர்முகத்தேர்வு எதிர்வரும் சனிக்கிழமை கிளி.பண்பாட்டு மண்டபத்திலும்;

யாழ்ப்பாணத்திலிருந்து விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகத்தேர்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் நாவலர் கலாச்சார மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

எனவே மேற்படி தேர்வுக்கு விண்ணப்பித்த அனைவரையும் சமுகம் தருமாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (கு)

## கைதடிப்பாலத்திற்கு அருகே புதிய படைஅரண் அமைப்பு

(தென்மராட்சி)

கைதடியில் புதிதாக அமைக்கப்பட்ட பாலத்திற்கு அருகே படையினர் புதிய படை அரண் ஒன்றை அமைத்து வருகின்றனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை தொடக்கம் இப்படை அரண் அமைக்கும் முயற்சிகளில் சிறிலங்காப்படையினர் ஈடுபட்டுள்ளனர். மண்மூட்டைகள், மரக்குற்றிகள் என்பன மறவன் புலோ படைமுகாமில் இருந்து உழவு இயந்திரங்கள் மூலம் கொண்டு வரப்பட்டு இவ்வேலைகள் நடைபெற்று வருகின்றது. (28)

## உரிய காலத்தில் பரீட்சைகள் நடத்தப்படுவதில்லை; வெளிவாரிப் பட்டப்படிப்பு மாணவர்கள் விசனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப்பட்டப்படிப்புப் பிரிவினால் நடத்தப்படும் கலை முதற்தேர்வு பரீட்சைகள் உரிய காலப்பகுதிகளில் நடத்தப்படுவதில்லையென வெளிவாரிப்பட்டப்படிப்பு மாணவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த இருவருடங்களாக இப்பரீட்சைகள் நடத்தப்படாமையால் யாழ்.பல்கலைக்கழகத்தில் கலைமுதற் தேர்வுக்காக விண்ணப்பித்த சுமார் ஆயிரம் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

காலத்துக்குக்காலம் பரீட்சைக்கான திகதியை அறிவிப்பதும் பின் அதனைப் பிற்போடுவதுமாக இடம் பெறும் இழுத்தடிப்பு நடவடிக்கைகள் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்கள் இது குறித்து தமது விசனத்தைத் தெரிவிக்கும் முகமாக கையெழுத்து வேட்டையிலும் ஈடுபட்டுள்ளனர். (33)

## யாழ். நகரிலுள்ள யமுனா ஏரியை புனரமைக்கும்படி கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். நல்லூரிலுள்ள " யமுனா" ஏரி என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க நீர்த்தடாகத்தைப் புனரமைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த, இறுதித் தமிழ் மன்னனான சங்கிலியனால் கட்டப்பட்ட வற்றாத நீரூற்றைக் கொண்ட 'யமுனா ஏரி" என்ற நீர்த்தடாகத்தின் ஓரங்கள் சிதைவடைந்திருப்பதனால் கழிவு நீர் சுத்தமான நீர் கொண்ட இத்தடாகத்துள் கலந்து வருகின்றது. இதன் அணைக்கட்டுகளும் சேதமடைந்துள்ளன.எனினும் வரலாற்று ஆவணமாகக் கட்டிக்காக்கப்பட வேண்டிய இந் நீர்த்தடாகம் கவனிப்பாரற்ற நிலையில் சேதப்படுத்தப்பட்டும் அசுத்தப்படுத்தப்பட்டும் வருவதையிட்டு குடாநாட்டு சமூக ஆர்வலர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (33)

## நல்லெண்ணையின் தரம் குறித்து பாவனையாளர்கள் சந்தேகம்

யாழ். குடாநாட்டில் உற்பத்தி செய்யப்படும் நல்லெண்ணையின் தர நிர்ணயம் குறித்துப் பாவனையாளர்களால் சந்தேகம் எழுப்பப்பட்டு வருகிறது. யாழ். குடாநாட்டிலுள்ள சில நல்லெண்ணை உற்பத்தியாளர்கள் தம் நல்லெண்ணை உற்பத்திக்கான எள்ளினைத் தரம் குறைந்த எள்ளுடன் கலப்படம் செய்வது மட்டுமன்றி எண்ணையிலும் கலப்படங்கள் செய்வதாக பாவனையாளர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இலாப நோக்குடன் நல் லெண்ணை உற்பத்தியாளர்கள் சிலர் மேற்கொள்ளும் இக்கலப்பட நடவடிக்கை காரணமாக பொதுமக்கள் தமது உணவுத் தேவைகளை நிறைவேற்றுவதற்குச் சுத்தமான நல்லெண்ணையைப் பெறமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது, (33)

## யாழ். மத்திய கல்லூரியில் தொழில்நுட்பவியல் கருத்தமர்வு

அமெரிக்காவைத் தளமாகக் கொண்டியங்கும் சர்வதேச தமிழ் தொழில்நுட்பவியலாளர் கழகத்தின் அனுசரணையுடன் உயர் தொழில்நுட்ப கற்கைநெறிகளைப் போதித்துவரும் வன்னி தொழில்நுட்பவியல் நிறுவகத்தால் கருத்தமர்வு ஒன்று நடத்தப்படவுள்ளது.

யாழ்.மத்திய கல்லூரியில் வரும் 24 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு இக்கருத்தமர்வு நடத்தப்படும்.

கற்கை நெறிகள் தொடர்பாகவும் வேலை வாய்ப்புக்கள் பற்றிய தகவல்கள் அடங்கியதாக இக்கருத்தமர்வு அமையும் எனவும் புதிய கல்வியாண்டிற்கான விண்ணப்பப் படிவங்களும்இங்கு நேரடியாக விநியோகிக்கப்படவிருப்பதாகவும் வன்னி தொழில்நட்பவியல் நிறுவகம் அறிவித்துள்ளது.

## இளைஞர் குழுக்களின் தொல்லையால் பொதுமக்கள் பெரிதும் பாதிப்பு

(அரியாலை)

அரியாலை மற்றும் கல்வியங்காடு பகுதிகளில் இளைஞர் குழுக்களால் மக்கள் பல்வேறு துன்பங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகிறது. இளைஞர்கள் வாள் வெட்டுக்களில் ஈடுபடுவதும் சாலையில் செல்லும் பெண்களை பாட்டுக்கள் பாடி கேலி செய்வதும், ஆபாச வார்த்தைகள் பேசுவதும் மதுபோதையில் சாலைகளை மறித்து உந்துருளிகளை செலுத்துவதும் கட்டுக்கு அடங்காத வகையில் அதிகரித்து இருப்பதாகவும் மாலை ஐந்து மணிக்குப் பின்பு இப்பகுதிகளில் பெண்கள் நடமாடுவது என்பதே பாரிய பிரச்சினையாக இருப்பதோடு இளைஞர் குழுக்களின் இக் கலாச்சார சீரழிவு நடவடிக்கைகளால் பொது மககள் பாரிய பிரச்சினையை எதிர் நோக்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.(28)

## உயர்தரப்பரீட்சை மாணவர்களுக்கு சிரேஷ்ட விரிவுரையாளர்கள் கருத்தரங்கு

(வடமராட்சி)

வடமராட்சிகரவெட்டியில் கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களில் கலைப் பிரிவுப் வர்த்தகப் பிரிவு மாணவர்களுக்கு இலவச வழிகாட்டல் கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாட்டினை கரவெட்டி ஸ்பேர்ஸ் விளையாட்டுக்கழகம் மேற்கொண்டுள்ளது.

யா/விக்னேஸ்வராக் கல்லூரியில் நாளை கலைப்பிரிவு மாணவர்களுக்கான கருத்தரங்கு காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும்.

நாளை மறுதினம் காலை 9.00 மணிக்குவர்த்தகப்பிரிவு மாணவர்களுக்கான கருத்தரங்கு இடம் பெறும்.

சிரேஷ்ட விரிவுரையாளர் பலரும் இந்தக் கருத்தரங்கில் கலந்து கொள்ளவுள்ளனர். மாணவர்களுக்கு இலவசமாக பாடக்குறிப்புக்களும் வழங்கப்படவுள்ளன. கணித உயிரியல்பிரிவுகளுக்கான இலவச கருத்தரங்குகள் விரைவில் நடத்தப்படுவதற்காக ஏற்பாடுகள் செய்யப்படுவதாக ஸ்பேர்ஸ் விளையாட்டுக் கழகத்தினர் அறிவித்துள்ளனர்.

## சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசத்தில் கூடுதலான உவர்த்தன்மை காணப்படுகின்றது

### –உவர்த்தடுப்பு மண்ணியல் நிபுணர்கள் தெரிவிப்பு

(வடமராட்சி)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட குடாநாட்டின் கரையோரப்பிரதேசங்களிலுள்ள நிலங்களும், கிணறுகளும் கூடுதலான உவத்தன்மையினைக் கொண்டிருப்பதாக உவத்தடுப்பு மற்றும் மண்ணியல் நிபுணர்கள் அறிவித்துள்ளனர். அண்மையில் வடமராட்சி வடக்கு மற்றும் கிழக்கில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட கரையோரப்பகுதிகளுக்கு உலக உணவு ஸ்தாபனத்தின் உவர்த்தடுப்பு நிபுணர்களும் விவசாயத்திணைக் களத்தின மண்ணாராய்ச்சி உத்தியோகத் தரும் விஜயம் செய்திருந்தனர்.

அவ்வேளையில் குறித்த கரையோரப் பிரதேசங்களிலுள்ள மண் வளமும், நீரும் பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தது. குறித்த கரையோர மண் கூடுதலான உவத் தன்மை உள்ளதாகவும் கடல்நீர் உட் புகுந்த கிணறுகளிலும் உவர்த் தன்மை காணப் படுவதாகவும் அப்பரிசோதனையின் பின்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதனால் குறித்த பிரதேசங்களில் உடனடியாக விவசாய நிலங்களை பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்தப் பட முடியாததோர் நிலையேற் பட்டிருப்பதாக விவசாயத்திணைக்களத்தின் யாழ்.அலுவலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. எனினும் தொடர்ந்து வரும் மழையின்போது விவசாய நிலங்கள் ஓரளவு பயிர்ச்செய்கைக்கு உகந்ததாக வரக்கூடும் எனவும் அதேபோன்று கடல்நீர் உட்புகுந்த கிணறுகளின் நீரை பம்பிகள் மூலம் மீண்டும் கடலுக்கு அனுப்பும் படியும் அவர்களால் ஆலோசனை கூறப் பட்டுள்ளதாக விவசாயத் திணைக்களத்தின் யாழ்.அலுவலக வட்டாரங்கள் மேலும் தெரிவிக் கின்றன. இதனிடையே சுனாமியால் பாதிக்கப்பட்ட பருத்தித்துறை, மருதங்கேணி பகுதிகளுக்கென புதிய திட்டங்கள் விவசாயத்திணைக்களத்தால் வகுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (27)

## கூட்டம் ஒத்திவைப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிமாவட்ட அரச செயலக மாநாட்டு மண்டபத்தில் இன்று காலை 10.00 மணிக்கு நடைபெறவிருந்த விவசாயக் குழுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் நடைபெற மாட்டதெனவும் இக்கூட்டம் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படுமெனவும் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி. இராசநாயகம் தெரிவித்துள்ளார். (சோ)

## சித்த ஆயுர் வேத மூலிகை உற்பத்தியை மேம்படுத்துவதற்கான கலந்துரையாடல்

(உடையார்கட்டு)

முல்லை மாவட்டத்தில் சித்த ஆயுர்வேத மூலிகை உற்பத்தியை மேம்படுத்துவதற்கான முக்கிய கலந்துரையாடல் நாளை புதுக்குடியிருப்பு அரசசார்பற்ற நிறுவன இணைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சித்த ஆயுர்வேத மற்றும் ஹோமியோபதி பரம்பரை வைத்தியர்கள் இக்கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளுமாறு தமிழீழ சுகாதார சேவையின் முல்லை மாவட்டப் பிரிவனர் கேட்டுள்ளனர். (19,05)

# சர்வதேச நிதி நிறுவனங்களின் நிபந்தனைகளும் சிறிலங்கா அரசாங்கத்தின் செயற்பாடும் —

சிறிலங்கா அரசாங்கத்தின் மீது சர்வதேச அமைப்புக்கள் காலத்திற்குக் காலம் பல்வேறு அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றன. இந்த அழுத்தங்களுக்குப் பணிந்து அரசின் செயற்பாடுகளில் மாற்றங்களை ஏற்படுத்தி தமது சிந்தனைக்கு செயல் வடிவம் கொடுப்பதில் இந்த சர்வதேச அமைப்பினர் தீவிரமாக செயற்பட்டு வருகின்றன.

உலகமயமாக்கலை விஸ்தரித்து நாடுகளின் சந்தையை சர்வதேசத்திற்கு திறந்துவிடுவதை அடிப்படையாக வைத்தே இந்த நிர்ப்பந்தங்கள் நீண்டு செல்கின்றன. இதற்காக அவை அந்தந்த நாடுகளின் நலன்கள், நிதியுதவிகள் பற்றியும் பேசுகின்றன. அதுமட்டுமல்ல நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களிலும் அவை தலையிடுகின்றன. இது அவர்களின் பேரம் பேசுதலுக்கு உதவுகின்றது. நாட்டின் நிதியுதவித்தேவையின் அளவு- அதில் தங்கியிருக்கும் தன்மை- அந்நாட்டு அரசியல் சூழல் என்பவற்றைப் பொறுத்து சர்வதேச அமைப்புக்களின் பேரம் பேசும் வலுவும் நிபந்தனையின் இறுக்கமும் தீர்மானிககப்படுகிறது.

இந்த வகையில் தான் வருடாந்தம் சிறிலங்கா அரசாங்கத்தின் மீதும் சர்வதேச நிதிநிறுவனங்கள் நிர்ப்பந்தங்களை- நிபந்தனைகளை விதித்து வருகிறது. இதன் தொடர் நடவடிக்கையாக தற்போது நிதியுதவி செய்வதானால் மூன்று நிபந்தனைகளை திருப்தி செய்ய வேண்டுமென கேட்டுள்ளன. இந்நிலையில் தான் தமக்கு அரசியல் இலாபம் கிடைக்கக்கூடியதும் அழுத்தம் கொடுக்கும் சர்வதேச அமைப்புக்களை திருப்திப்படுத்தக் கூடியதுமான முடிவுகளை எடுத்து ஆளும் தரப்பினர் தமது அதிகார கதிரைகளைக் காப்பாற்றி வருகின்றனர்.

சர்வதேச அமைப்பினர் சிறிலங்காவில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் மீது பிரயோகித்துள்ள மூன்று விதமான அழுத்தங்களுக்கு சிறிலங்காவிற்கான நிதியுதவியையே அவை பணயமாக வைத்துள்ளன. தமது நிபந்தனைகளை திருப்தி செய்யாவிட்டால் நிதியுதவி வழங்கப்படமாட்டாது என்றே அவற்றின் அழுத்தம் அமைந்துள்ளது. என்ன செய்வது தனது இனவாதப் போக்கால் எழுந்த போர்ச்சூழலால் பொருளாதாரத்தை அழித்துவிட்டன சிங்கள அரசாங்கங்கள். இதன் விளைவாக சர்வதேச அமைப்புக்களின் வருடாந்த நிதியுதவியிலேயே தங்கி வாழ வேண்டிய சூழ்நிலை இவ்வாறான பின்னணியிலேயே.

*.சுனாமியால் அழிந்த வடக்கு கிழக்குப் பிரதேசத்தை புனரமைக்க அரசு-புலிகள் இணைந்த பொதுகட்டமைப்பை உருவாக்க வேண்டும்.

*.சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான பணிகளை துரிதப்படுத்தி திகதியை அறிவிக்க வேண்டும்.

*.நாட்டின் அபிவிருத்தி குறித்து அரசாங்கத்தின் பொருளாதார வேலைத் திட்டத்தையும் அறிவிக்க வேண்டும்.

என்ற மூன்று அழுத்தங்களை பிரயோகித்து வருகின்றன. இந்த அழுத்தம் அண்மைக்காலத்தில் சற்றுக் கடுமையாகி நிபந்தனைகளாக மாற்றம் கண்டுள்ளன. வரும் "மே" மாதம் 15ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரை சிறிலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் கண்டியில் நடைபெறவுள்ளதையடுத்து இந்த அழுத்தம் சற்றுக் கடினமாகியுள்ளது. என்றும் கூறலாம்.

இந்த அழுத்தங்கள் மூன்றாக இருப்பினும் ஒன்றுக்கொன்று தொடர்புபட்டவையே சுனாமி மீள்கட்டுமான பொதுக்கட்டமைப்பானது வெறுமனே மீள்கட்டுமானப்பணிகளை மேற்கொள்வதற்கான அதிகாரசபையாக மட்டுமன்றி இனப்பிரச்சினை தீர்விற்கான ஆரம்பக்கட்ட முன்னோடி நடவடிக்கையாகவும் கருதப்படுகிறது. அடுத்ததாக இந்த சமாதான நடவடிக்கையின் வெற்றியிலேயே பொருளாதார அபிவிருத்தி தங்கியுள்ளது. ஏனெனில் ஏற்கனவே யுத்தம் செய்ததனாலேயே பொருளாதாரம் தற்போதைய மோசமான நிலைக்கு தள்ளப்பட்டது. அத்தோடு யுத்தம் நடைபெறுமானால் பொருளாதார அபிவிருத்தியென்பது குதிரைக் கொம்பாகவே இருக்கும். அதனால் ஒன்றையொன்று தொடர்புபட்ட இந்த மூன்று நிபந்தனைகளையும் அரசாங்கம் எவ்வாறு திருப்தி செய்து சர்வ தேச அமைப்புக்களிடம் இருந்து நிதியுதவியைப் பெறப்போகின்றது என்பதை நாட்டு மக்கள் உன்னிப்பாக அவதானிக்கின்றனர்.


விடுதலைப்புலிகளுடன் இணைந்து பொதுகட்டமைப்பை ஏற்படுத்தினாலோ இனப்பிரச்சினைத்தீர்விற்கான சமாதான முயற்சியாக விடுதலைப் புலிகளுடன் பேசினாலோ அரசாங்கத்தில் இருந்து விலகப்போவதாக 39 பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஜே.வி.பி கூட்டணி அரசாங்கத்தை கடுமையாக எச்சரித்து வருகிறது. ஒன்பது பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஜாதிகஹெல உறுமயவும் ஜே.வி.பியின் நிலைப்பாட்டிலேயே இருக்கிறது. இந்நிலையில் ஓரிரு ஆசனங்களை பெரும்பான்மையாகக் கொண்டு ஆட்சி அமைத்துள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியால் இவ்விரு கட்சியினரின் கோரிக்கைக்கு செவிசாய்க்காமல் இருக்க முடியாது. ஆதலால் தான் சர்வதேச அமைப்பினரின் அழுத்தங்களுக்குப் பணிய முடியாத அரசாங்கம் அரசியலில் ஆரோக்கியமான சூழ்நிலையை தோற்றுவிக்க கூடியதான கருத்துக்களை மட்டும் வெளியிட்டு வருகிறது. இது ஆட்சியாளர்களின் கவர்ச்சிகரமான சொல்லாடலாகும்.

இந்த நிலையில் தான் சர்வதேச அமைப்புக்களின் நிபந்தனைகளை நிறைவேற்றுவதிலும் அரசாங்கம் ஓட்டையைத் தேடுகிறது. இதன் வழியாக சர்வதேச அமைப்பினரைத் திருப்திப்படுத்தி நிதியுதவியைப் பெற்றுக்கொள்ள அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

அதாவது பொதுக்கட்டமைப்பு விடயத்திலோ, சமாதான முன்னெடுப்பிலேயோ முன்னேற முடியாத அரசாங்கம் பொருளாதாரத் திட்டங்களினூடாக சர்வதேச அமைப்புக்களைத் திருப்திப்படுத்த எண்ணியுள்ளது.

அது தான் அரச துறைகளான மின்சாரசபை மற்றும் பெற்றோலியக் கூட்டுதாபனத்தை தனியார் மயப்படுத்தும் அல்லது அதனை மறுசீரமைக்கும் திட்டமா கும்-பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துதல், சமாதான முன்னெடுப்பு விடயங்களில் அரசாங்கத்தின் நகர்வுக்கு ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டையை தனியார் மயமாக்கல் என்ற துரும்புச்சீட்டால் திசைதிருப்பிவிடவும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. எஞ்சியுள்ள அரசாங்கத் துறைகளை தனியார் மயமாக்கி உலகமயமாக்கலுக்கு மேலும் வழிவிட்டு சர்வதேச சந்தைக்கு சிறிலங்காவின் சந்தையில் இருந்த எஞ்சிய கட்டுப்பாடுகளையும் நீக்கிவிடும் நிலையை ஏற்படுத்துவதே சர்வதேச நிதி நிறுவனங்களின் முக்கியமான இலக்காகும்.

அவற்றின் ஏனைய நிபந்தனைகள் இதற்கு அடுத்தபட்சமானவையாகவே கொள்ள வேண்டும் அவ்வாறு இல்லாவிட்டால் பல தசாப்தங்களாக இலங்கையில் தமிழர்கள் ஆளும் தரப்பினரால் அடக்குமுறைக்குட்பட்டு வருகின்ற நிலையில் வருடாவருடம் அடக்குமுறை, மனிதவுரிமை மீறல் குறித்து சர்வதேச நிதிநிறுவனங்கள் சிறிலங்கா அரசாங்கத்தின் மீது அழுத்தங்களை, கண்டனங்களைத் தெரிவிக்கின்றபோதும் சர்வதேச நிதி நிறுவனங்கள் நிதியுதவியை வழங்கியிருக்க மாட்டாது.




இதற்கு ஒரு வழிவிடுவது போன்றே சர்வதேச அமைப்பினர் மூன்று நிபந்தனைகளை விதித்துள்ளனர். அதாவது இரண்டு சிறிலங்கா ஆட்சியாளர்களால் நிறைவேற்ற முடியாத நிபந்தனைகளையும், ஒரு நிறை வேற்றக் கூடிய நிபந்தனையையும் விதித்துள்ளனர் இதன்

**கெல்மன்**

மூலம் சர்வதேச அமைப்பினர் தமது முக்கிய நோக் கத்தை நிறைவேற்றிக் கொள்வர். அதன் மூலம் சந்திரிகா அரசாங்கமும் இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரத் தில் முன்னேற்ற கரமான நட வடிக்கைகளை எடுக்காது தமது ஆட்சி கவிழாமல் பாதுகாத்துக் கொள்ள சர்வதேச அமைப்புக்கள் வழி விட்டுள்ளன என்று கூறுவது தவறாகாது.

# வடக்குகிழக்கு மீள்கட்டுமானப்பணிக்கு பொதுக்கட்டமைப்பே ஒரே வழி

**-குமார் ரூபசிங்க**

(கொழும்பு)

சுனாமியால் மிகமோசமாகப் பாதிப்படைந்த வடக்கு கிழக்கு பிரதேசத்தில் மீள் கட்டுமானம், மீள் குடியமர்வு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு மிகத் தேவையான ஒரேயொரு வழி விடுதலைப்புலிகளும் அரசாங்கமும் இணைந்த பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்குதலே என சமாதானச் செயற்பாட்டாளர் டாக்டர் குமார் ரூபசிங்க தெரிவித்தார். நேற்றுக் காலை எம்.ரி.வி.தொலைக் காட்சிக்குத் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இணைந்த பொதுக்கட்டமைப்பின் நடவடிக்கைகள் இரண்டு மாதங்களிற்கு முன்னரே அமுல்படுத்தப்பட்டிருக்க வேண்டும் ஆனால் துரதிஷ்டவசமாக நான்கு மாதங்கள் ஆனபின்பும் அரசாங்கம் பொதுக் கட்டமைப்பு உடன்படிக்கையை எட்டுவதற்குப் பிரச்சினைப்படுகின்றது எனவும் அவர் கூறினார்.

இதற்கிடையில் பாதிக்கப்பட்டவர்களுக்கான மீள் கட்டுமானப் பணிகளை ஆரம்பிப்பத ற்கு காணிகளை வழங்க உள் ளூராட்சி அதிகாரிகளும் பின்னிற்பதாக தெரிவிக்கப்படுகிறது. ஜே.வி.பி.கட்சியைச் சேர்ந்த பிரதி யமைச்சர் ஒருவரும் அரசின் இந்தப் போக்கினால் உதவி வழங்கும் வெளி நாட்டு அமைப்புகளும் தமது உறுதிப் பாட்டை இழக்க நேரிடும் என்று தெரிவித்துள்ளார்.

# யுத்தத்தை அரசு விரும்பாவிட்டாலும் பொறுமைக்கும் எல்லையுண்டு

**–பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி**

(கொழும்பு)

யுத்தம் ஒன்றை அரசு விரும்பாவிட்டாலும் பொறுமைக்கும் ஒரு எல்லை இருப்பதாக பிரதி பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறிவிக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

திவயின பத்திரிக்கைக்கு அவர் அளித்த பேட்டியில் மேலும் குறிப்பிடுகையில்; அரசியல் தீர்வு ஒன்றுக்காக ஏற்படுத்தபட்ட சமாதான ஒப்பந்தத்தை தொடர்ந்து முன்னெடுப்பதா அல்லது யுத்தம் ஒன்றுக்கு ஆயத்தமாகிறார்களா என்பதை விடுதலைப் புலிகள் இவ்வருட இறுதிக்குள் தெரிவிக்க வேண்டுமெனவும் விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்த மீறல்களை செய்திருப்பினும் இராணுவத்தினரும், அரசும் இன்னும் பொறுமை காட்டுவதாக கூறியுள்ளார். அரசு எவ்விதத்திலும் யுத்தத்தை விரும்பாத போதிலும அதனை எதிர் கொள்ள தயாராக இருப்பதாக தெரிவித்துள்ளார். யுத்தம் நடந்தாலும் சரி நடக்காவிட்டாலும் சரி அரசு முப்படைகளையும் உஷார் நிலையில் வைத்திருப்பதாகவும், தேவையான போர் விமானங்கள் கப்பல்கள் ஆயுதங்களைப் பெறுவதுடன் புதிய வீரர்களுக்கு பயிற்சியளிப்பதிலும் தொடர்ந்து ஈடுபடுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இறக்குமதி அனுமதிப்பத்திரமின்றி உதிரிப்பாகம் இறக்கிய நபர் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக உந்துருளி உதிரிப்பாகங்களை இலங்கைக்கு கொண்டு வந்து விற்பனை செய்தார் என்ற குற்றச்சாட்டில் சந்தேகத்தின் பேரில் ஒருவர் சிலாபம் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நீண்ட நாட்களாக இந்த நடவடிக்கை இடம் பெற்றுவந்துள்ளதாக பொலிசார் கூறுகின்றனர் இறக்குமதிக்கான அனுமதிப்பத்திரம் இல்லாமல் இந்த நடவடிக்கை இடம் பெற்று வந்தாக பொலிசார் கூறுகின்றனர்.

**பல்லாயிரம்** மனித உயிர்களையும் பெறு மதிமிக்க சொத்துக்களையும் சில நிமிடங்களில் குடித்துவிட்ட 'சுனாமி' கடல் பேரலைகள் ஏற்படுத்திய பேரவலம் நிகழ்ந்து நான்கு மாதங்களாகின்றன.

இந்தப் பேரவலம் உலகின் பல பகுதிகளைத்தாக்கி இருந்தாலும் எங்களது தாயகத்தில் இதுவரை சந்தித்திராத பேரழிவை ஏற்படுத்தியிருக்கிறது. ஏற்கனவே சிங்கள ஆக்கிரமிப்பாளர்களால் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக நடாத்தப்பட்ட போரால் பெரும் அழிவுகளைச் சந்தித்து நலிவடைந்து போயிருந்த மக்களைச் சுனாமி பேரலைகள் வேரோடு சாய்த்து விட்டது.

சுனாமி அலைகள் சில மணித்துளிகளில் ஏற்படுத்திவிட்டுப்போன பேரவலம் எவராலும் மறந்துவிட முடியாதது. கரையோரக் கிராமங்களைச் சுடுகாடாக்கியிருக்கிறது.

பாதிப்படைந்து போயிருந்த மக்கள் கண்ணீராலும், கதறலாலும், மௌனத்தாலும் தான் தங்களுக்கு நிகழ்ந்த பேரிழப்பை, தமது உறவுகளை கடல் பறித்துக் கொண்ட போன வேதனையான சம்பவங்களை வெளிப்படுத்தினர். இந்த நிலையில் பாதிக்கப்பட்டுப் போயிருந்த மக்களிடம் அழிவுகள் பற்றி உடனடியாக கேட்பது அவர்களை மேலும் வேதனைப்படுத்துவதாக அமையும் என்ற காரணத்தால் பேரவலத்தை உடனடியாக வெளிப்படுத்த முடியாமல் போயிருந்தது.

அதனால் கடற்பேரலைகள் தாக்கிய சில மணி நேரங்களில் அந்தப் பகுதிகளுக்குச் சென்று உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தவர்களையும், உயிரற்ற உடல்களையும் மீட்டிருந்த - பெரும் பணியில் ஈடுபட்ட - மீட்புப் பணியா ளர்கள் ஊடாக இந்த அவலத்தை வெளிப் படுத்தவதற்கு முனைந்தோம்.

மனித அவலத்தை வெளிக்கொண்டு வருகின்ற பணிக்கு பலரது ஒத்து ழைப்பும் கிடைத்தது பலர் தமது கருத் துக்களைத் தந்து இந்தப்பணியின் முக்கியத் துவத்தை வெளிப்படுத்தி அவலத்தின் பதிவு சிறப்பாக அமைய உதவியிருந்தனர். அவர் களின் ஆலோனைகளும்



எதனையும் பார்த்துச் சகித்துக்கொள்ள முடியாமல் இருந்தது. பெருமளவான மனிதர்கள் கூடியிருப்பதைக் கண்டிருக்கிறோம். ஆனால் அந்த மனிதர்களே சடலங்களாகக் குவிந்து கிடப்பதை எவராலும் ஒரு போதுமே கண்டு கொள்ள முடியாது. இந்தப் பேரவலத்தைச் சுனாமி அலைகள் ஏற்படுத்திவிட்டு போயிருக்கிறது.


சுனாமி இவ்வளவு பேரழிவை ஏற்படுத்தியதற்கு சுனாமி பற்றிய முன் அனுபவம் இன்மையே காரணம் என்பது அனைவரின் கருத்தாக இருக்கிறது அத்துடன் இந்தப் பேரழிவுச் சம்பவத்தின் நேரடிச் சாட்சியங்களாக இருந்து எம்முடன் தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டவர்கள் அனைவரும் இதனையே வெளிப்படுத்தியிருந்தனர். அவர்கள் அவ்வேளையில் தமது அனுபவ அடிப்படையில் யுத்த ஓசையாக அதனை அனுமானித்தார்களே தவிர அது கடலன்னையின் மூர்க்கமென சிறிதும் நினைத்திருக் கவில்லை.

எனவே இவர்களின் அனுபவங்களை வெளிக்கொண்டு வரவேண்டும் என்பது இந்தத் தொடரின் நோக்கமாக இருந்தது. வெவ்வேறுபட்டவர்களின் நேரடி அனுபவங்களைப் பெற்றுக்கொள்ளும் முயற்சியில் பாதிக்கப்பட்ட நிலையிலும் அவர்கள்தமது மனப்பதிவுகளை மீட்டு எமக்குத்தந்திருந்தமை தொடரின் நோக்கம் கணிசமான அளவில் நிறைவேற உதவிய பலர் தமது அனுபவங்களைக் கூறியது மட்டுமல்லாது நேரடிச் சாட்சியங்களாக அமைந்த வேறு சிலரையும் அறிமுகம் செய்தனர்.

**எங்கள் தாயக மக்களின் வாழ்வைச் சிதைத்த ஆழிப் பேரலைகளின் கோர்த்தை அனைத்து மக்களும் அறிந்து கொள்ள வேண்டும் கடற்பேரனர்த்தத்தின் விளைவுகள் எப்படி அமைந்தது போன்ற விடயங்களைப் பதிவு செய்து விட வேண்டும் என்ற நோக்கில் இந்தத் தொடரைத் தந்திருந்தோம். எனினும் சுனாமி தந்த பேரவலத்தை எங்களால் முழுமையாகப் பதிவுசெய்துவிட முடியவில்லை. சம்பவத்தில் உயிர் பிழைத்துக் கொண்ட ஒவ்வொருவரிடமும் ஒவ்வொருவிதமான அனுபவம் இருக்கிறது அவர்கள் கூறுகின்ற கதைகள் நெஞ்சைஉலுப்புகின்ற சோகக் கதைகள் அவை எழுத்தால் வடித்து விட முடியாதவை; அந்தளவுக்கு அவை சுமையானவை.**

# ஆழிப் பேரலை நிகழ்த்திய அனர்த்தம் எழுத்தில் வடித்துவிட முடியாத மனிதப்பேரவலம்

பெருந்தொகையான கரையோர மக்களின் உயிர்களைக் காவுகொண்டுவிட்டது. தமிழினம் என்றுமே சந்தித்திராத பேரவலத்தைச் சந்தித்து நிற்கிறது.



இந்த நிலையில் எங்கள் தாயக மக்களின் வாழ்வைச்சிதைத்த ஆழிப்பேரலைகளின் கோரத்தை அனைத்து மக்களும் அறிந்து கொள்ள வேண்டும். இயற்கைக் கடல் பேரனர்த்தத்தின் விளைவுகள் எப்படி அமைந்தது என்ற விடயங்களைப் பதிவு செய்துவிட வேண்டும் என்ற நோக்கில் இந்தத் தொடரைத் தந்திருந்தோம்.

**பகுதி 57**

பேரழிவு நிகழ்ந்தது சில தினங்களிலேயே கரையோர கிராமங்களுக்கு நடந்தது என்ன, அவலத்தின்தன்மை எப்படி இருந்தது போன்ற அழிவின் தன்மைகளை வெளிப்படுத் துவதற்கு முனைந்தோம் ஆனால் பாதிப்படைந்து போயிருந்த மக்களிடம் இருந்து உடனடியாக சம்பவம் பற்றிய தகவல்களைப் பெறமுடியாதிருந்தது.

அவ்வாறு மீட்பு பணியாளர்கள் ஊடாக அவலத்தைப் பதிவு செய்துகொண்டிருக் கின்ற சமயம் அழிவின் அதிர்வில் இருந்து மீண்டு கொண்டிருந்த மக்களையும் சந்தித்துச் சுனாமி எங்கள் தாயகத்தில் நிகழ்த்திய கொடுமையை ஆவணப்படுத்தியிருக்கின் றோம்.

சுனாமி தந்த பேரவலத்தை எங்களால் முழுமையாகப் பதிவு செய்துவிடமுடிய வில்லை. சம்பவத்தில் உயிர் பிழைத்துக்கொண்ட ஒவ்வொருவரிடமும் ஒவ்வொருவிதமான அனுபவம் இருக் கிறது. அவர்கள் கூறுகின்றகதைகள் நெஞ்சை உலுப்புகின்ற சோகக்கதைகள். பாதிக்கப் பட்ட ஒவ்வொருவரின் மனதிலும் பதிந்திருக்கின்ற சுனாமி அதிர்வுகள் எழுத்தால் வடித்து விட முடியாதவை; அந்தளவுக்கு அவை சுமையானவை.

அதேபோல மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த அனைவரது பணியையும் எங்களால் வெளிப்படுத்த முடியவில்லை.

எங்கள் தயாகத்தில் நிகழ்ந்த இந்த ஒத்துழைப்புக்களும் இந்தப் பதிவின் தரம் சிறக்க வழிவகுத்தது.

நீண்டகால யுத் தச் சூழலில் சிறிலங்காப் படைகள் தமிழ்மக்கள் மீது மேற்கொண்ட பெரும் படுகொலைச் சம்பவங்களைப் பார்த்திருக்கிறோம். தினமும் மரணமாகும் மக்களின் சடலங்களைக் கண்டிருக்கிறோம். இவ்வாறான சம்பவங்களைத் தினமும்

**அ.லோகீசன்**

## ஆழிப்பேரலைகள் முல்லையில் நடத்திய கோரத்தாண்டவம்

கண்டதால் எங்கள் மனங்கள் வைராக்கிய மடைந்திருந்ததாகவே எண்ணினோம். உண் மையும் அப்படித்தான் இருந்தது.

ஆனால் சுனாமி கடல் அனர்த்தம் காவு கொண்டுவிட்ட முல்லை நகரின் பகுதிகளுக்கும் ஏனைய பகுதிகளுக்கும் போய்பார்க் கின்ற பொழுது அந்தப் பகுதிகள் எங்கும் அலங்கோலமானநிலையில் சிறுவர் பெரியவர் என்ற வேறுபாடில்லாமலும் ஆண் கள், பெண்கள் என்ற வேறுபாடில்லாமலும் உடல்கள் இருந்ததை கண்டபொழுது அதைச் சகித்துக்கொள்ள முடியாமல் இருந் தது.

எங்கு பார்த்தாலும் மனித உடல்கள் காணப்பட்டன. உண்மையில் அந்தக் காட்சிகள்


மேலும் மீட்புப் பணியாளர்களும் சிலரை அறிமுகம் செய்தனர். இவர்களது தகவல் களும் இத்தொடர் சிறக்க வழியமைத்தது.

பலர் தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டமை தம்மை ஆற்றுப்படுத்த உதவியதாகவும் தெரிவித்திருக்கின்றனர். இது இந்தத் தொடரை தருவதற்கும் தூண்டு தலாக அமைந்தது.

இந்த வகையில் இத்தொடர் 56 அங்கங் களாக வெளிவர உதவிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்து இத்தொடரை நிறைவு செய்கிறோம்.



# அவுஸ்திரேலியாவில் ஞாயிறன்று நடைபெற்ற கவிஞர் புதுவை இரத்தினதுரையின் "பூவரசம் வேலியும் புலுனிக்குஞ்சுகளும்" நூல் வெளியீட்டு விழா








## சென்னையில் புலிகளுக்கு ஆதரவாக கோசமிட்டவர் நீதிமன்றால் விடுதலை

விடுதலைப் புலிகள் அமைப்புக்கு ஆதரவாக கோசமிட்டதாக இந்திய காவற்துறையினர் தாக்கல் செய்த வழக்கில் பெரியார் திராவிடக் கழகத்தின் துணைத் தலைவர் ஆனூர் ஜெகதீசன், பொதுச் செயலாளர் கோவை ராமகிருஷ்ணன் ஆகியோர் விடுதலை செய்யப்பட்டனர்.

சென்னை வள்ளுவர் கோட்டத்தில் பெரியார் திராவிடக் கழகம் சார்பாக சாதி ஒழிப்பு மாநாடு 1997ஆம் ஆண்டு நவம்பர் 26-ஆம் திகதி நடந்தது.

இந்த மாநாட்டையொட்டி ஊர்வலம் நடைபெற்றது. ஊர்வலத்தில் சென்றவர்கள் விடுதலைப் புலிகள் வாழ்க என்றும் தலைவர் பிரபாகரன் வாழ்க என்றும் பலவித கோசங்களை எழுப்பிய தாக முறைப்பாடு செய்யப்பட்டது. ஆனூர் ஜெகதீசன், கோவை ராமகிருஷ்ணன் ஆகியோர் மீது இந்திய குற்றப்பிரிவுக் காவற்துறையினர் வழக்குத் தொடர்ந்தனர். இந்த வழக்கு சென்னை சைதாப்பேட்டை 11ஆவது பெருநகர குற்றவியல் நடுவர் பிரபுதாஸ் முன்னிலையில் கடந்த ஒன்றரை ஆண்டுகளாக நடந்தது. ஒன்பது காவற்துறை அதிகாரிகள் உட்பட 13 பேர் அரசுத் தரப்பில் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டனர். ஆனூர் ஜெகதீசனும், கோவை ராமகிருஷ்ணனும் ஊர்வலத்தில் பங்கேற்கவில்லை என்று ஒரு சாட்சி கூறினார். குற்றச்சாட்டுகள் அரசுத் தரப்பில் சரிவர நிரூபிக்கப்படவில்லை என்று கூறிய நீதிபதி, இருவரையும் வழக்கிலிருந்து விடுதலை செய்வதாக நேற்று முன்தினம் தீர்ப்பளித்தார்.

## பிறநாடுகளிலுள்ள தமது நாட்டுப் பிரஜைகளை பாதுகாப்பதில் சிறிலங்கா பின்நிற்கிறது!

பிற நாடுகளிலுள்ள தமது நாட்டு பிரஜைகளை காப்பதில் சிறிலங்கா. பூட்டான் நாட்டை காட்டிலும் பின் நிற்பதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

வியன்னா உடன்படிக்கையின் கீழ் தூதரக உறவுகள் தொடர்பில் தெற்காசிய நாடுகளில் சிறிலங்கா மாத்திரமே அந்த உடன்படிக்கையை ஏனைய நாடுகளுடன் செய்துக்கொள்ளவில்லை.

எனவே சவுதி அரேபியாவில் குற்றச்செயல்களுக்காக மரண தண்டனைக்கு உள்ளாகியுள்ள மூன்று இலங்கையர்களையும் காப்பாற்றுவதில் சட்ட சிக்கல்கள் காணப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நேபாளம் முதன் முறையாக இவ்வாறான உடன்படிக்கையை ஏனைய நாடுகளுடன் செய்து கொண்ட நாடாகும். அந்த நாடு 1965 ஆம் ஆண்டு இந்த ஒப்பந்தத்தை செய்துக்கொண்டது.

இதனையடுத்து பாகிஸ்தான் 1969 இலும், இந்தியா 1977 இலும், பங்களாதேஷ் 1978 இலும் இந்த ஒப்பந்தத்தை செய்துக்கொண்டன.

பூட்டான் 1981 இலும் மாலைத்தீவு 1991 இலும் இந்த ஒப்பந்தத்தை செய்துக்கொண்டன.

இந்த நிலையில் பூட்டான் மற்றும் மாலைதீவு நாடுகளின் வெளிநாட்டமைச்சுகளை காட்டிலும் சிறிலங்கா வெளிநாட்டமைச்சு குறிப்பிட்ட ஒப்பந்த விடயத்தில்

அசிரத்தை காட்டியமை குறித்து ஆச்சரியம் வெளியிடப்பட்டுள்ளது.

எனவே சவுதி அரேபியாவில் மரணதண்டனை பெற்றுள்ள இலங்கையர்களான இ.ஜே.வி குரே ரஞ்சித் டி சில்வா மற்றும் சனத் புஸ்பகுமார ஆகியோரை விடுவிப்பதில் தடைகள் ஏற்பட்டுள்ளன.

இதேவேளை தூதரக மட்டத்திலான வியன்னா உடன்படிக்கை செய்துக்கொள்ளப்பட்டிருக்குமானால் சிறிலங்கா அரசாங்கத்திற்கு சவுதியில் மரண தண்டனை பெற்றுள்ள குறிப்பிட்ட மூன்று இலங்கையர்களின் சார்பில் சட்ட உதவி களை மேற்கொண்டிருக்க முடியும்.

அத்துடன் அவர்களை விடுவிப்பதற்கான சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்க முடியும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## சிறைச்சாலை ஆணையாளரை விசாரணைக்கு வர உத்தரவு

வெலிக்கடை சிறைச்சாலையிலிருந்து கைதியொருவர் தப்பியோடியமை தொடர்பாக சிறைச்சாலை ஆணையாளர் றூமி மசூர்க்கிற்கு சிறிலங்கா குற்றத்தடுப்புப் பிரிவினர் விசாரணைக்கு வருமாறு உத்தரவிட்டுள்ளனர். குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் பொறுப்பு அதிகாரி லயனல் குணதிலக்க, றூமி மசூருக்கு இது தொடர்பான கடிதம் அனுப்பியுள்ளதாகவும் அவர் அடுத்த வாரம் குற்றத்தடுப்புப் பிரிவினர் முன்னிலையில் ஆஜராக வேண்டுமெனவும் இக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. இதேவேளை இக்கைதி தப்பியோடிய விடயம் தொடர்பான மஜிஸ்ட்ரேட் நீதிமன்ற விசாரணை ஒன்றும் நடைபெற்று வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.


## நினைவழியா நெஞ்சங்களின் நான்காம் ஆண்டு வீர வணக்கங்கள்




ஈன்றதாய் மடியில்:-25-09-1980 செல்வி.திருச்செல்வம்
ஈழத்தாய் மடியில்:-21-04-2001 சிவச்செல்வி

*மகிமைத் தமிழீழத் தாயகம் வேண்டி—நின்*
*மண்ணில் மாண்புறு நின் தியாகம்*
*மறக்கக்கூடியதா மகளே!*
*மாவீர மஞ்சரிக் குஞ்சே.*

தகவல் :—சி. மு. இரத்தினசிங்கம்
பெரியதந்தை—(நாச்சியார் மைந்தன்)
பெரியப்பா, பெரியம்மா
கப்டன் வேலவன் குடும்பத்தினர்.

(5376)



## வன்னி தொழில்நுட்பவியல் நிறுவகம் Vanni Institute of Technology

வன்னி தொழில்நுட்பவியல் நிறுவகம், (Vanni Institute of Technology) வடக்கு-கிழக்கு மக்களுக்கு உலகின் நவீன தொழில்நுட்ப அறிவினை ஊட்டுவதன் மூலம், உயர் தொழில்நுட்ப வேலைவாய்ப்புக்களை பெறுவதற்கும், சர்வதேச சந்தையுடன் இப் பிராந்தியம் போட்டியிடக் கூடிய வல்லமையைப் பெறுவதற்கும், உரிய தொழில்நுட்ப கல்வியினை வழங்குவதற்காக ITTPO (சர்வதேச தமிழ் தொழில்நுட்பவியலாளர் கழகம்) இனால் ஸ்தாபிக்கப்பட்ட ஓர் உயர்தொழில்நுட்ப கல்வி நிறுவகம் ஆகும். இது 2003ஆம் ஆண்டு கிளிநொச்சி நகரத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. (VanniTech is a registered non-profit educational establishment)

ஓர் சர்வதேச தரமிக்க பல்கலைக்கழகத்தை நோக்கமாகக் கொண்டு வன்னிடெக் திட்டமானது வடிவமைக்கப்பட்டு முதற்கட்டமாக (VanniTech Phase I) கிளிநொச்சி நகரில் 12 மாத, முழுநேர உயர் தொழில்நுட்ப கற்கை நெறிகளை வழங்கும் ஓர் நிறுவகமாக தற்போது இயங்கிக் கொண்டிருக்கிறது.

வன்னி தொழில்நுட்பவியல் நிறுவகத்தில்இ கீழ்வரும் ஒருவருட முழுநேர நெறிகளுக்கான (Study Programmes) மூன்றாம் தொகுதி மாணவர்களை உள்வாங்குவதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

i. Computer Communications & Networking (COM)
ii. Database Applications Development (DAD)
iii. Electronics (ELE)
iv. Web Based Applications Development (WAD)

**நுழைவுத் தகைமைகள்:**

i. G.C.E (A/L) இல் மூன்று பாடங்களில் சித்தியும் G.C.E (O/L) இல் ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் சிறப்புச் சித்தியும் கொண்டிருத்தல் வேண்டும். *அல்லது*
ii. அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவகத்தின்/பல்கலைக்கழகத்தின் பட்டதாரி. *அல்லது*
iii. வன்னி தொழில்நுட்பவியல் நிறுவகத்தினால் அங்கீகரிக்கப்படும், தொழில் முன்னனுபவத்துடன் கூடிய (Work Experiences) ஏனைய தகைமைகள்.

விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு தகைமையுள்ள விண்ணப்பதாரிகள் முறையே நுழைவுப் பரீட்சைக்கும், நேர்முகப் பரீட்சைக்கும் தெரிவுசெய்யப்படுவார்கள். இவ் ஒருவருட முழுநேர கற்கைநெறிக்கான கட்டணமாக (Course Fee) ரூபாய் 15000/= செலுத்தப்பட வேண்டும். இக்கட்டணத்தை பகுதிக்கட்டணமாக செலுத்தக்கூடிய வசதிகள் உள்ளன. வசதி குறைந்த மற்றும் திறமையான மாணவர்களை ஊக்குவிப்பதற்காக இங்கு பல புலமைப்பரிசில்களும் (Need based and Merit based scholarships) வழங்கப்படுகின்றன.மலையகப் பிரதேசத்திலிருந்து வரும் மாணவரொருவருக்கான புலமைப்பரிசிலும் இதிலடங்கும்.

தூர இடத்தில் இருந்துவரும் மாணவர்களுக்கான தங்குமிட வசதிகளைக்கொண்ட வளாகமாக இது உள்ளது. போதனைகள் யாவும் ஆங்கிலத்தில் நடாத்தப்படும்.

இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்பப் படிவத்தைப் தயார்செய்து ஆயல 6 ஆம் திகதிக்கு முன்பாக கீழ் வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். மாதிரி விண்ணப்பப் படிவத்தினை எமது நிறுவகத்திலும், இணையத்தளத்தின் ஊடாகவும் (http://www.vanni.org/admissions.htm), சுய விலாசம் இடப்பட்டு முத்திரை ஒட்டப்பட்ட தபால் உறையினை அனுப்புவதன் மூலமும் பெற்றுக்கொள்ளலாம்.

முகவரி: Registrar, Office of Admissions
Vanni Institute of Technology
Kilinochchi,

TP 021 228 5876
Fax 021 228 5875
Email registrar@vanni.org
URL www.vanni.org

VanniTech
Vanni Institute of Technology

(6067)

-சென்னை மாநகர ஆட்சி இரு வட்டாரங்களுக்கான இடைத் தேர்தல்-

# அ.தி.மு.க.வினர் கள்ள வாக்கு வேட்டை எதிர்த்து மறியலில் ஈடுபட்ட 2000 பேர் கைது!

(சென்னை)

சென்னை மாநகராட்சி இடைத் தேர்தலில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கள்ள வாக்குப் போட்டதைக் கண்டித்து வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தினர் மீது பொலிசார் தடியடிப் பிரயோகம் நடத்தியதுடன் மு.க ஸ்டாலின் உட்பட இரண்டாயிரம் தி.மு.க தொண்டர்கள் தமிழகப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சென்னை மாநகராட்சியின் 110, 131 ஆகிய வட்டாரங்களில் இடைத் தேர்தல் நேற்று முன்தினம் நடைபெற்றது. காலை 7.00 மணிக்கு வாக்குப் பதிவுகள் ஆரம்பிக்கப் பட்டது. ஆயினும் இதற்கு முன்னதாக அங்கு பதற்றமான சூழ்நிலை காணப்பட்டது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் துணை மேஜர் கராத்தே தியாகராஜன் தனது அடியாட்களுடன் சென்று வாக்குச் சாவடியில் அடாவடித்தனங்களில் ஈடுபட்டதுடன் வாக்குச்சாவடிப் பணியாளர்களை அச்சுறுத்தி விட்டு கள்ள வாக்குகளைப் போட்டுச் சென்றனர்.

அதே நேரம் கோபாலபுரம் சாரதா வித்தியாலய உயர் நிலைப் பள்ளியில் அமைக்கப்பட்டிருந்த வாக்குச் சாவடிக்கு அடியாட்களுடன் சென்ற வடசென்னை மாவட்ட அ.தி.மு.க செயலாளர் பி.கே சேகர் பாபு அங்கும் கள்ளவாக்குப் போடும் நடவடிக்கையில் ஈடுபட்டார்.

தி.மு.க தலைவர் கருணாநிதியின் வீட்டுக் கருகில் அமைந்துள்ள இந்த வாக்குச் சாவடியில் தான் கருணாநிதி குடும்பத்தினர் ஒவ்வொரு தேர்தலின் போதும் வாக்களிப்பார்கள். இதே போன்று பல வாக்குச் சாவடிக்குள் பொலிசாருடன் அத்து மீறி நுழைந்த அ.தி.மு.கவினர் அங்கிருந்தவர்களை விரட்டியடித்து விட்டு கள்ளவாக்குப் போட்டனர். அ.தி.மு.க.வினரின் இந்த நடவடிக்கைகளைக் கண்டித்து மு.க ஸ்டாலின் தலைமையில் தி.மு.கவினர் அண்ணாசாலையில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த சாலை மறியல் போராட்டம் இரண்டு மணி நேரம் இடம்பெற்றது.


இதனையடுத்து அங்கு விரைந்த தமிழகப் பொலிசார் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மு.க ஸ்டாலின் மு.க தமிழரசன் மற்றும் எம்.எல்.ஏ.க்கள் ஆட்காடு வீராச்சாமி, பாரிதி இளம்வழுதி, ஆயிரம் விளக்கு உசேன் மற்றும் பாலராமன், சேப்பாக்கம் சுரேஸ் காங்கிரஸ் நிலைக்குழுத் தலைவர் எஸ்.நாராயணன் ஆகியோர் உட்பட சுமார் 2000 பேரைக் கைது செய்தனர். அவர்கள் அனைவரும் சூளையிலுள்ள நேரு வெளயருகிலுள்ள மாநகர ஆட்சி சமுதாய நலக் கூடத்தில் தடுத்து வைக்கப்பட்டனர். முன்பதாக ஆயிரம் விளக்கு காவல் நிலையத்தால் தென் சென்னை மாவட்டச் செயலாளர் ஜே.அன்பழகன் தலைமையிலான 200 பேர் கைது செய்யப்பட்னர். அன்று மாலை 5.00 மணிக்கு அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## தி.மு.க துணைச் செயலாளர் மு.க.ஸ்டாலினை கைது செய்தமைக்கு காங்கிரஸ் கண்டனம்!

(புதுடில்லி)



தி.மு.க துணைச் செயலாளர் மு.க ஸ்டாலின் கைது செய்யப்பட்டதை காங்கிரஸ் கட்சி கண்டித்துள்ளது. இது தொடர்பாக டில்லியில் காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் ஆனந்தசர்மா நிருபர்களிடம் தெரிவிக்கும் போது தமிழக அரசு தனது அரசியல் எதிரிகளைப் பழிவாங்கும் போக்கில் செயற்படுத்துகிறது. ஸ்டாலின் போன்ற முன்னணித் தலைவர்களை இப்படி நடத்தக் கூடாது எனத் தெரிவித்தார்.



நேற்று முன்தினம் சென்னையில் நடைபெற்ற ஐக்கிய முற்போக்கு கூட்டணிக் கட்சியினரின் அலோசனைக் கூட்டம் கருணாநிதி தலைமையில் நடைபெற்றது. இதில் டாக்டர் ராமதாஸ்,வைகோ, வாசன் கம்யூனிஸ்ட் செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

## சட்டசபைத் தேர்தலை எப்படிச் சந்திப்பதென ஆழமாக யோசிப்போம் - கருணாநிதி!

சட்ட சபைத் தேர்தலை எப்படி சந்திப்பதென்று ஆழமாக யோசித்து வருகின்றோமென தி.மு.க தலைவர் மு.கருணாநிதி தெரிவித்துள்ளார். சென்னை அண்ணா அறிவாலயத்தில் வைத்து நிருபர்களிடம் தெரிவிக்கின்ற போது அவர் மேற்படி தெரிவித்தார்.

மேலும் கூறியதாவது, சென்னையிலே நடைபெற்ற இரண்டு மாநகர சபைத் தேர்தலிலும் நடைபெற்ற சனநாயக விரோதச் செயலுக்குக் கண்டனம் தெரிவித்து தி.மு.க அதன் கூட்டணிக் கட்சிகளும் தேர்தலைப் புறக்கணித்திருக்கின்றன.

வாக்குச் சாவடிகளுக்கு சட்ட மன்ற உறுப்பினர்கள் வரக்கூடாது எனக் கூறி வாக்குச் சாவடிக்கு வந்த தி.மு.கவின் மாவட்டச் செயலாளர் அன்பழகனையும் சட்டமன்ற உறுப்பினர் ஒருவரையும் பொலிசார் கைது செய்து கொண்டு சென்றுள்ளனர். இதனாலேயே வீதிமறியல் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். இதே வேளை வாக்கு மோசடி தொடர்பாக தி.மு.க வாக்குச் சாவடி முகவர்கள் கொடுத்த முறைப்பாட்டை தேர்தல் அதிகாரி பெற்றுக் கொள்ளவில்லை. இதனால் தான் சென்னையிலும், மேலூரிலும் இந்தத் தேர்தலைப் புறக்கணிப்பதாக முடிவு செய்துள்ளோமென தி.மு.க தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.




மாதகல் நுணசை

அருள்மிகு ஸ்ரீ முருகமூர்த்தி கோவில்

வருடாந்த

**மஹோற்சவ விஞ்ஞாபனம் -2005**

தீர்த்தம் சிறந்தோங்கு நுணசைப்பதியில்
பூர்வ மகிமைகள் கடம்பமரத்தடி
சீர்பெற்றுவிளங்கி அடியார் பிணியறும்
மூர்த்த மூவனாம் போற்றி.

கந்தா கடம்பா கார்திகேயா கலியுகவரதா கதிர்காமா
தேவர்கள் துயர்தனை நீக்கிவிடவே திரு அவதாரம்
- செய்தாயே
சங்கரன் மைந்தா கணபதி சகோதரா
சூரபத்மனை சங்கரித்த வீராதீரா வெற்றிவேலா
நுணசைப் பதியில் எழுந்தருளி கடம்பா கார்த்திகேயா
உன்பாதம் சரண். (நுணசைப்பகெம்)

முருகனேயச் செல்வர்களே!

இந்து சமுத்திரத்தில் முத்தென போற்றப்படும் இலங்கைத்தீவின் வடபால் மேற்திசையில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க மாதகல் பதியில் அற்புதங்கள் நிறைந்த நுணசைப் பதியில் வீற்றிருக்கும் வள்ளி தேவசேனு சமேத முருகப் பெருமானுக்கு நிகழும் தாரண வருஷம் பங்குனி மாதம் 31ஆம் நாள் (13.04.2005) புதன்கிழமை பஞ்சமி திதியும் ரோகினி நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய சுபவேளையில் 4.30 நிமிடமளவில் எம் பெருமானுக்கு துவஜாரோகணம் (கொடியேற்றம்) வைபவம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து 12 தினங்கள் உற்சவம் நடைபெறும். 12ஆம் நாளாகிய சித்திரா பூரணை அன்று தீர்த்த உற்சவத்துடன் திருவிழா இனிது நிறைவுபெறும். அடியார்கள் யாவரும் ஆசார சீலர்களாக வந்து எம்பெருமானை தரிசித்து இஸ்ட சித்திகளைப் பெற்றுய்வீர்களாக.

**மகோற்சவ கிரிஜாகால நிகழ்வுகள்**

21.04.2005 (சித்திரை 08 ஆம் நாள்) வியாழக்கிழமை
9ஆம் திருவிழா பட்டுக்குடைத் திருவிழா.
22.04.2005 (சித்திரை 09ஆம் நாள்) வெள்ளிக்கிழமை
10ஆம் திருவிழா மஞ்சம் இரவு 7.00 மணிக்கு நடைபெறும்.
23.04.2005 (சித்திரை 10ஆம் நாள்) சனிக்கிழமை
11ஆம் திருவிழா இரதோற்சவம் காலை 8.00மணிக்கு அபிஷேகம் ஆரம்பித்து பகல் 12 மணிக்கு எம் பெருமான் தேரில் ஆரோகணிப்பார். மாலை 3மணிக்குபச்சை சாத்துதல் இடம்பெறும்.
24.04.2005 (சித்திரை 11ஆம் நாள்) ஞாயிற்றுக்கிழமை
12ஆம் திருவிழா தீர்த்தோற்சவம் மு.ப.5.00மணிக்கு. இரவு 7.00மணிக்கு துவஜா அவரோகணம் (கொடியிறக்கம்) வைபவம் நடைபெறும்.
25.04.2005 (சித்திரை 12ஆம் நாள்) திங்கட்கிழமை
பகல் பிராயச்சித்த அபிஷேகம் நடைபெறும். மாலை4 மணிக்கு திருக்கல்யாண உற்சவம் நடைபெறும்.

முக்கிய குறிப்பு: முருகப் பெருமானின் தேர்த் திருவிழா நடைபெற்றுக் கொண்டிருகிறது.

இங்ஙனம்,
ஆலய தர்மகர்த்தா
கணபதிப்பிள்ளை பாலசுப்பிரமணியம்.

(சி-11801)



**குருத்துவ திருநிலைப்படுத்தல் அழைப்பு**



**அருட்சகோதரன் ஆசீர்வாதம்பிள்ளை அன்ரன் புனிதகுமார்**
**23.04.2005**

முல்லைத்தீவு புனித பேதுருவானவர் ஆலயத்தைச் சேர்ந்த அருட்சகோதரன் ஆசீர்வாதம்பிள்ளை அன்ரன் புனிதகுமார் 23.04.2005 அன்று வணக்கத்துக்குரிய யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் யாழ்.தூயமரியன்னை பேராலயத்தில் காலை 9.15 மணிக்கு குருவாக திருநிலைப்படுத்தப்படவுள்ளார். இந் நிகழ்வில் கலந்து இறைவனுக்கு நன்றி கூற வருமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பங்குத்தந்தையும்,
பங்குமக்களும்,
முல்லைத்தீவு.

திரு. திருமதி. ம. ஆசீர்வாதம்பிள்ளை
செல்வபுரம்,
முல்லைத்தீவு.

(6054)



**உப மருந்தாளர் பயிற்சிநெறி ஆரம்பம்**

அண்மைக்காலங்களாக நடைபெற்று வந்த உப மருந்தாளர் பயிற்சி நெறி மழை காரணமாகவும், சுனாமி அனர்த்தம் காரணமாகவும் பிற்போடப்பட்டிருந்தது. இவ் வகுப்புக்கள் மீண்டும் 23.04.2005 ஆரம்பமாகவுள்ளதால் இப்பயிற்சி நெறியில் கலந்து கொள்பவர்கள் மீண்டும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நிர்வாகம்,
நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனம்,
கிளிநொச்சி.

# பிராந்தியப் போட்டிகளில் வெளிநாட்டு வீரர்களை விலக்கி உள்நாட்டு வீரர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும்!

### இங்கிலாந்து அணித் தலைவர் மைக்கல் வோன்




இங்கிலாந்து தேசிய கிரிக்கெட் அணியை எதிர்காலத்தில் மேலும் பலமான அணியாக உருவாக்க வேண்டுமானால் உள்ளூர் வீரர்களுக்கு ஊக்கமளிப்பதுடன், வெளிநாட்டு வீரர்களை பிராந்தியப் போட்டிகளில் இருந்து விலக்கிக் கொள்ள வேண்டுமென இங்கிலாந்து அணியின் தலைவர் மைக்கல் வோன் தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு வீரர்களுக்கு ஊக்கமளித்து அவர்களை சிறந்த பிராந்திய வீரர்களாக உருவாக்க வேண்டும் எனவும், வெளிநாட்டிலிருந்து வீரர்களை வரவழைத்து போட்டிகளை நடத்தக்கூடாது எனவும் இங்கிலாந்து கிரிக்கெட் அணித்தலைவர் மைக்கல் வோர்ன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், வெளிநாட்டு அணி வீரர்கள் பிராந்தியப் போட்டிகளில் சிறப்பாக ஆடியதை குறிப்பிடுவது சிறந்தது என்றார்.

இங்கிலாந்தும் வேல்ஸ் கிரிக்கெட் சபையும் வெளிநாட்டு வீரர்களை வரவழைப்பதில் அதிக பணத்தைச் செலவழிப்பதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார். பலகாலமாக பிராந்திய அணி களுக்கு வெளிநாட்டிலிருந்தே வீரர்கள் வரவழைப்பதாக குறிப்பிடும் அவர், பிராந்திய அணிகளுக்கு உள்ளூர் வீரர்களை அறிமுகப்படுத்தி ஊக்கமளித்தால் இங்கிலாந்து தேசிய கிரிக்கெட் அணி எதிர்காலத்தில் பலமான அணியாகத் திகழும் என்றும் கூறினார்.

# இந்திய-பாகிஸ்தான் வீரர்களின் பொருட்கள் 5 இலட்சத்துக்கு ஏலம்



இந்தியா - பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் பயன்படுத்திய துடுப்பு உட்பட பல்வேறு பொருட்கள் ஐந்து லட்சம் ரூபாவிற்கு மேல் ஏலம் விடப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வீரரும் தாங்கள் பயன்படுத்திய பொருட்களில் கையெழுத்து இட்டிருந்தனர். இந்தப் பொருட்கள் மொத்தமாக ஐந்து இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவிற்கு ஏலம் விடப்பட்டது.

இதில், பாகிஸ்தானுக்கு எதிரான தொடரில் மிகவும் மோசமாக விளையாடிய இந்திய அணித் தலைவர் கங்குலியின் துடுப்பு அதிகபட்சமாக ஒரு இலட்சத்துக்கு ஏலம் போயுள்ளது. மேலும் அவர் பயன்படுத்திய கையுறை (கிளவுஸ்) 65 ஆயிரத்துக்கு ஏலம் விடப்பட்டுள்ளது.'

இது தவிர இந்திய அதிரடி ஆட்டக்காரர் ஷேவாக் மற்றும் பாகிஸ்தான் அணித் தலைவர் இன்சமாம் ஆகியோர் பயன்படுத்தி துடுப்பு 45 ஆயிரத்துக்கு ஏலம் விடப்பட்டது. இதில் டெஸ்டில் அதிக ஓட்டமான 309ஐ குறிப்பிட்டு ஷேவாக் துடுப்பில் கையெழுத்திட்டு இருந்தார். இன்சமாம் 329 ஓட்டத்தை குறிப்பிட்டு கையெழுத்து போட்டிருந்தார். மற்ற வீரர்கள் பயன்படுத்திய பொருட்களை வாங்க யாரும் அதிக ஆர்வம் காட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# சரே மாநில அணியில் விளையாட பிளெமிங் மறுப்பு



இங்கிலாந்தின் சரே மாநில அணிக்காக விளையாட வருமாறு விடுக்கப்பட்ட அழைப்பை நியூசிலாந்து கிரிக்கெட் அணித் தலைவர் பிளெமிங் நிராகரித்துள்ளார். அதற்குப் பதிலாக நொட்டிங்காம்சயர் அணித்தலைவராக இருக்க அவர் ஒப்பந்தம் செய்துள்ளார்.

சரே மாநில அணியில் அவர் இணையாதமைக்கு இங்கிலாந்தின் வாழ்க்கை முறைக்கு ஏற்ப தன்னை மாற்றிக்கொள்ள முடியாமையே காரணம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

### உலகக் கிண்ணக் கிரிக்கெட்

# போட்டி குறித்த அட்டவணை ஜூலை 19இல் அறிவிக்கப்படும்

2007ஆம் ஆண்டு மேற்கிந்தியத்தீவுகளில் நடைபெறவுள்ள உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளுக்கான திகதிகள் ஜூலை 19இல் அறிவிக்கப்படுமென சர்வதேச கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

மேற்படி போட்டிகள் தொடர்பாக லண்டனிலுள்ள சர்வதேச கிரிக்கெட் சபை அலுவலகத்தில் மூன்று நாள் விசேட கூட்டம் ஒன்று நடைபெற்றது. இக்கூட்டத்திலேயே மேற்படி அறிவிக்கப்பட்டது.

2007ஆம் ஆண்டு உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் மேற்கிந்தியத்தீவுகளில் நடைபெறவுள்ளன. இதில் போட்டிகள் நடைபெறும் இடம், எந்தெந்த திகதிகள் நடைபெறும், எந்தெந்த அணிகளுக்கிடையே போட்டிகள் நடைபெறும் என்பன தொடர்பான விபரம் ஜூலை மாதம் 19ஆம் திகதி டிரினிடாட்தீவில் உள்ள போர்ட்ஆப்ஸ்பெயின் நகரில் அறிவிக்கப்படுமென்று சர்வதேச கிரிக்கெட் சபை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# கங்குலி மீண்டும் இந்தியஅணியில் சேர்க்கப்படுவார் — கிரண்மோரே



இந்திய அணியில் கங்குலி மிண்டும் சேர்க்கப்படுவார் என்று தேர்வுக்குழுத் தலைவர் கிரண்மோரே கூறியுள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணித்தலைவர் கங்குலிக்கு ஆறு போட்டிகளில் விளையாட சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) தடை விதித்தது. இதனால் பாகிஸ்தானுடன் நடந்த கடைசி இரண்டு ஆட்டங்களில் கங்குலி விளையாட முடியாமல் போனது. அவர் தனக்கு விதிக்கப்பட்ட தடையை எதிர்த்து மீண்டும் மேல்முறையீடுசெய்யப்போவதாக அறிவித்துள்ளார். இந்தத் தடை நீடிக்குமானால் கங்குலி இன்னும் நான்கு போட்டிகளில் விளையாட முடியாது.

இந்த நிலையில் இந்திய கிரிக்கெட் அணியின் வீரர்களை தேர்வு செய்யும் தேசிய தேர்வுக்குழுவின் தலைவர் கிரண்மோரே நேற்று முன்தினம் யு.என்.ஐ. செய்தி நிறுவனத்திற்கு தொலைபேசியில் பேட்டியளித்தார். அப்போது கிரண் மோரே கூறியதாவது,

கங்குலி ஆறு போட்டிகளில் விளையாட தடை விதிக்கப்பட்டிருந்த காரணத்தால் தான் இந்தியா -பாகிஸ்தான் இடையே நடந்த கடைசி இரண்டு போட்டிகளிலும் அவர் சேர்க்கப்படவில்லை மற்றபடி அவர் தான் அந்தத் தொடருக்குத் தலைவர் அதில் மாற்றம் செய்யப்படவில்லை.

தனக்கு விதிக்கப்பட்ட தடையை எதிர்த்து கங்குலி ஐ.சி.சி.க்கு முதல் முறை முறையீடு செய்த போது அது நிராகரிக்கப்பட்டது பற்றி நான் கருத்துச் சொல்ல விரும்பவில்லை. அது விசாரணையை பாதிப்பது ஆகிவிடும். கங்குலி தொடர்ந்து மோசமாக விளையாடிவந்ததால்தான் கடைசி இரண்டு போட்டிகளில் அவரை சேர்க்காமல் ஐ.சி.சி தடையை சாதகமாக எடுத்துக்கொண்டு கங்குலியை கைகழுவி விட்டோம் என்று சொல்வதுசரி அல்ல கங்குலி மிகச்சிறந்த வீரர் இதற்கு முன்பு நடந்த ஆட்டங்களில் அவர் ஏராளமாக ஓட்டம் குவித்திருக்கிறார்.

கங்குலி மறுபடியும் இந்திய அணிக்குள் வருவார். அதுவும் முன்பை விடபலசாலியாக என்பதில் எனக்கு உறுதியான நம்பிக்கை இருக்கிறது. ஏனென்றால் அவர் அனுபவம் மிக்க கிரிக்கெட்வீரர் அவருக்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீங்கியதும் அவர் இந்திய அணிக்கு மீண்டும் வருவார். இவ்வாறு அவர் கூறினார்.




# இருபது ஓவர் போட்டிகளில் பங்கேற்க பாகிஸ்தான் அதிக ஆர்வம்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியினர் இருபது ஓவர்கள் கொண்ட போட்டிகளில் பங்கேற்க அதிக ஈடுபாடு கொண்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி முதற்கட்டமாக உள்ளூரில் 11 பிராந்திய அணிகளிடையே சுற்றுப் போட்டி ஒன்றை நடத்தவும் பின்னர் சர்வதேச போட்டிகளில் பங்கேற்கவும் தயாராகி வருகின்றது. பிராந்திய அணிகளுக்கிடையேயான போட்டிகள் இம்மாதம் 25ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரை நடைபெறுமென அந்நாட்டு கிரிக்கெட் சபைத் தலைவர் சகாரியாகான் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கருத்து தெரிவிக்கும்போது, 20 ஓவர்களைக் கொண்ட போட்டிகளை 50 ஓவர் போட்டிகளைவிட ரசிகர்கள் அதிகமாகவிரும்புவதாகவும், கிரிக்கெட்டில் இது ஆர்வத்தை ஏற்படுத்தும் என்றும் தெரிவித்தார்.

பாகிஸ்தானில் உள்ள 11 அணிகளையும் மூன்றாகப் பிரித்து முக்கோணப் போட்டியாக இதனை நடத்தவிருக்கின்றோம். வெற்றி பெறும் அணிக்கு ஐயாயிரம் டொலர்களைப் பரிசாகக் கொடுப்பதுடன் அதிக ஓட்டங்களைப் பெறும் வீரருக்கு 2,500 டொலர்களையும் பரிசாகக் கொடுக்கத் திட்டமிட்டுள்ளோம்.

மேலும் பாகிஸ்தானுக்கு வரும் அக்டோபர் முதல் டிசம்பர் வரை அந்நாட்டுக்கு வருகைதரவுள்ள இங்கிலாந்து அணியுடன் 20 ஓவர்கள் கொண்ட போட்டிகளில் பங்கேற்கும் எனவும் அந்நாட்டுக் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. அத்துடன் அவுஸ்திரேலிய சுற்றுப் பயணத்திலும் 20 ஓவர் போட்டியை நடத்தவுள்ளதாகவும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, வரும் ஜூன் மாதம் இங்கிலாந்து செல்லும் அவுஸ்திரேலியா அணி அங்கு இங்கி லாந்து அணியுடன் 20 ஓவர் போட்டிகளிலும் மோதவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# கோலாலம்பூரில் ஹொக்கிப்போட்டி

கோலாலம்பூரில் அடுத்த மாதம் நடைபெறும் மினி உலக கோப்பைபோட்டியில் ஏழு முன்னணி ஹொக்கி விளையாடும் நாடுகள் மோதுகின்றன.

மலேசிய நாட்டின் தலைநகர் கோலாலம்பூரில் 14ஆவது சுல்தான் அஸ்லான்ஷா கோப்பைக்காக போட்டிகளிடையே நடைபெற வுள்ளது. இந்தத் போட்டி மே 26ஆம்திகதி தொடங்கவுள்ளது ஜூன் ஐந்தாம் திகதிஇறுதிப் போட்டி நடைபெறவுள்ளது. இது ஒரு மினி உலக கோப்பை ஹொக்கிபோல நடைபெறும்.

இப்போட்டியில் இந்தியா, பாகிஸ்தான்,தென்னாபிரிக்கா நியூசிலாந்து அவுஸ்திரேலியா, மலேசியா, கொரியா ஆகிய ஏழு நாட்டு அணிகள் கலந்து கொள்கின்றனர். ஆரம்பத்திலிருந்து அனைத்துப்போட்டிகளும் லீக் ஆட்டங்களாக நடக்கும்.

சுல்தான் அஸ்லான்ஷா கோப்பையை இந்திய அணி 1991,95,98 ஆகிய ஆண்டுகளில் மூன்று தடவை வென்றுள்ளது. அதுபோல அவுஸ்திரேலியா, பாகிஸ்தான் அணிகளும் தலா மூன்று முறை இந்தப் கோப்பையை வென்றுள்ளன.

# ஹைதராபாத்தில் இந்திய மூத்த வீரர்கள் கிரிக்கெட் சம்பியன் போட்டி

அகில இந்திய மாநில அணிகளுக்கு இடையிலான மூத்தவீரர்களுக்கான கிரிக்கெட் சம்பியன் போட்டி ஹைதராபாத்தில் இம்மாதம் 22இல் தொடங்கி 24 வரை நடைபெறும்.

ஐந்து மாநிலங்களில் வெற்றிபெற்ற அணிகள் தேசிய பட்டம் பெறுவதற்கான இந்த மூன்று நாள் போட்டியில் பங்கேற்கின்றன.

அதன்படி ஹைதராபாத் (தெற்கு), சத்தீஸ்கர் (மத்திய), ஒரிசா (கிழக்கு), டில்லி (வடக்கு) மற்றும் சௌராஷ்டிரா (மேற்கு) மண்டல சம்பியன் அணிகள் பங்கேற்கின்றன.

இத்தகவலை, ஹைதராபாத் மூத்த கிரிக்கெட் வீரர்கள் சங்கத்தின் தலைவர் மனோகர் கடந்த செவ்வாய்க்கிழமை நிருபர்களிடம் தெரிவித்தார்.

# பெண்களுக்கான வலைப்பந்தாட்ட பயிற்சி முகாம்

தமிழீழ பிரதேசத்திலே ஆண்களுக்கான கால்பந்தாட்ட அணிகளைப்போன்று பெண்கள் கால்பந்து அணியினை உருவாக்கும் நோக்கில் கால்பந்தாட்டப் பயிற்சி முகாம் ஒன்றை நிறுவி கால்பந்தாட்டத்தில் ஆர்வமுள்ள பெண்களுக்கான சிறப்புப் பயிற்சிகளை வழங்க தமிழீழ விளையாட்டுத்துறையினர் தீர்மானித்துள்ளனர்.

எனவே இப்பயிற்சியின் நன்மையைக் கருத்திற்கொண்டுவிளையாட்டினை வளர்த்துக் கொள்ளும் நோக்குடன் பயிற்சிகளை பெற விரும்பும் பெண்கள் தங்கள் பெயர் விபரங்களை 01.05.2005 இற்கு முன்னர் இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு தமிழீழ விளையாட்டுத்துறை இணைப்பாளர் அ.இன்பன் கேட்டுக்கொண்டுள்ளார். அத்துடன் இப்பயிற்சியில் கலந்து கொள்வோருக்கு விசேட சலுகைகள் வழங்கப் படும் என்பதனையும் தமிழீழ விளையாட்டுத்துறையினர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மூன்றாவது டெஸ்ட் போட்டி

மேற்கிந்தியத் தீவுகள் தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டி இன்று ஆரம்பமாகின்றது.

இப் போட்டி மேற்கிந்தியத்தீவின் பார்டோஸ் மைதானத்தில் நடைபெறவுள்ளது.


நான்கு டெஸ்ட் போட்டிகளைக் கொண்ட தொடரில் தென்னாபிரிக்க அணி 1-0 என்ற நிலையில் முன்னணி வகிப்பது குறிப்பிடத்தக்கது.

## பொதுக்கூட்டம்

யாழ். மாவட்ட மெய்வல்லுநர் சங்கப் பொதுக்கூட்டம் நாளை (வெள்ளிக்கிழமை) பிற்பகல் 4.00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

யாழ். மாவட்ட மெய்வல்லுநர் சங்கத் தலைவர் மரியதாஸ் தலைமையில் இப் பொதுக்கூட்டம் இடம் பெறும்.

பதிவு செய்யப்பட்ட யாழ். மாவட்ட விளையாட்டுக்கழகங்களின் உறுப்பினர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது. (33)



## சிந்தனைக்கு

ஆயிரமாயிரம் போராளிகளின் அற்புதமான தியாகத்தில் உருவாகி வரும் எமது தாயகத்தை, ஒரு உன்னதமான-மேன்மையான சமுதாயமாக மாற்றியமைக்க வேண்டும்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 21-04-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## வீழ்ச்சிநோக்கி....!

ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியில் இருந்த 2003 டிசம்பரில் 6.6 வீதமாக இருந்த பொருளாதார வளர்ச்சி, 2004 டிசம்பரில் 4.4 வீதமளவில் குறைவடைந்துள்ளது. அதாவது, பொருளாதார வளர்ச்சி வீதம் 2003ஆம் ஆண்டைவிட 2004இல் 2.4 வீதத்தால் வீழ்ச்சி கண்டுள்ளது. வேறொரு விதத்தில் கூறுவதனால் சுமார் மூன்றில் ஒரு பங்களவில் வீழ்ச்சி கண்டுள்ளது.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஐ.தே.முன்னணி அரசாங்கத்திடம் பாதுகாப்பு அமைச்சு உட்பட மூன்று முக்கிய அமைச்சுக்களைப் பறித்ததோடு, பொதுத்தேர்தலையும் நடத்தத் தீர்மானித்தபோது இலங்கையின் பொருளாதார வளர்ச்சி என்பது கேள்விக்குரியதொன்றாகவே மாறியிருந்தது. ஏனெனில், சனாதிபதி சந்திரிகாவின் இந்நடவடிக்கையானது அரசியல் ஸ்திரமற்றதொரு நிலையைத் தோற்றுவித்திருந்தது.

ஏற்கனவே, சனாதிபதி சந்திரிகா தலைமையிலான பொ.ஐ. முன்னணி அரசாங்கம் ஆட்சியில் இருந்து வெளியேறியபோது நாட்டின் பொருளாதாரம் மிகவும் மோசமானதொரு நிலையிலேயே இருந்தது. குறிப்பிட்டுக் கூறுவதானால், பொருளாதார வளர்ச்சி வீதமானது எதிர்க் கணியமானதொரு நிலையிலேயே காணப்பட்டது.

இத்தகையதொரு நிலைக்கு அரசாங்கம் நடாத்திய தொடர்ச்சியான யுத்தமே காரணமாக இருந்தது. ஆனால், இலங்கையில் யுத்தமானது மக்கள் மீது பெரும் பொருளாதாரச் சுமையை ஏற்றியதாயினும் அரசியல் வாதிகளைப் பொறுத்து அது ஆதாயம் தரும் ஒன்றாகவே இருந்தது. சிலர் அரசியலுக்குள் பிரவேசிக்கவும், சிலர் ஆட்சி அதிகாரத்தைப் பெறவும், சிலர் பொருளாதார ரீதியில் பெரும் வளர்ச்சி அடையவும் யுத்தமே காரணமாக இருந்தது.

ஆனால், அரசாங்கம் நடாத்திய யுத்தமானது அரசியல் ஸ்திரமற்ற நிலைமைக்கும், நாட்டின் பெரும் பொருளாதார இழப்பிற்கும் காரணமாகியது. இதன் காரணமாக உற்பத்தி, அந்நிய முதலீட்டு வருகை என்பன பெருமளவில் பாதிக்கப்பட்டு பொருளாதாரம் பெரும் சவால்களை எதிர்நோக்கியது.

இந்நிலையில், யுத்தத்தை நிறுத்தி – இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று காணப்படும் என்ற வாக்குறுதியை ஐக்கிய தேசிய முன்னணி வழங்கியதன் காரணமாக அது ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியது. இதையடுத்து இனப்பிரச்சினைத் தீர்விற்கென சில நடவடிக்கைகளையும் முன்னெடுத்தது.

ஐ.தே.முன்னணி அரசாங்கமும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணக்கூடிய நடவடிக்கைகளில் சாதனை எதனையும் எட்டவில்லை. ஆயினும், யுத்தத்தை நிறுத்தி – சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும் வகையிலான சூழல் ஒன்றை உருவாக்கியிருந்தது என்பது நிராகரிக்கப்பட முடியாததாக இருந்தது.

இத்தகையதொரு நிலையில், பொருளாதாரம் வீழ்ச்சிப் போக்கில் இருந்து மீண்டு வளர்ச்சிப் போக்கிற்குத் திரும்பியது. சமாதான முயற்சிகளில் ஏற்பட்ட நம்பிக்கை அந்நிய முதலீட்டையும், உல்லாசப் பயணிகளின் வருகையும் அதிகரிக்கச் செய்ததினால் பொருளாதாரம் வளர்ச்சி காணத் தொடங்கியது. சமாதானப் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படுவது உறுதி செய்யப்பட்டால் பெரும் தொகை நிதியுதவிக்கும் உறுதி கூறப்பட்டது.

இத்தகையதொரு நிலையிலேயே 2002 இல் படுமோசமாக –0.2 ஆக இருந்த பொருளாதார நிலை 2003 டிசம்பரில் 6.6 வீதம் வளர்ச்சிப் போக்கைக் காட்டியது. ஆனால், சனாதிபதி சந்திரிகா மூன்று முக்கிய அமைச்சுப் பொறுப்புக்களைப் பறித்தெடுத்ததில் இருந்து மீண்டும் பொருளாதாரம் நெருக்கடிகளைச் சந்திக்கத் தொடங்கியது. மூன்று அமைச்சுக்கள் பறிப்புடனேயே பங்குச் சந்தையில் ஏற்பட்ட பெரும் வீழ்ச்சி இதனை உறுதி செய்வதாக இருந்தது.

ஆனால், பின்னர் ஆட்சிக் கவிழ்ப்பு, ஆட்சி மாற்றம், இனப்பிரச்சினைக்குப் புலிகளுடன் பேச்சுவார்த்தை மூலமான தீர்விற்கு எதிர்ப்பு, தனியார் மயமாக்கலுக்கு எதிர்ப்பு ஆகிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சியுடன் சனாதிபதி சந்திரிகா கொண்டுள்ள கூட்டு என்பன அரசியல் ஸ்திரமற்ற தன்மையைத் தோற்றுவிப்பதாக மட்டுமல்ல, பொருளாதாரத்தையும் பெரிதும் பாதிப்பதாக மாறியது.

அதாவது, ஆட்சியாளர்களிடையில் காணப்படும் கருத்தொற்றுமையின்மை யுத்தத்தை மீண்டும் தோற்றுவித்துவிடுமோ? என்ற சந்தேகமும், ஆளும் கூட்டணியிடையே பொருளாதாரக் கொள்கை தொடர்பாகக் காணப்படும் கருத்து வேறுபாடுகள் பொருளாதாரக் கட்டமைப்பில் பாதிப்பை தோற்றுவிப்பதாக அமையுமா? என்ற ஐயமும், உதவி வழங்கும் நாடுகள் நிறுவனங்கள் மீதான அவதுறுப் பேச்சுக்கள், வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் மீதான கெடுபிடிகள் எனப் பல்வேறு காரணிகள் இன்று பொருளாதாரத்தை வெகுவாகப் பாதிப்புறச் செய்துள்ளன.

இவற்றோடு 2004ஆம் ஆண்டு டிசம்பர் 26இல் சுனாமி ஏற்படுத்திய தாக்கம் பொருளாதாரத்தில் மேலும் ஒரு பெரும் சுமையாக ஏறியுள்ளது. ஆனால், ஆட்சியாளர்கள் இவற்றில் எதனையும் கருத்திற் கொள்ளவில்லை. ஆட்சி அதிகாரத்தைத் தக்கவைப்பது மட்டுமே அவர்களின் ஒரே குறிக்கோளாகவுள்ளது. இந்நிலை தொடருமானால், பொருளாதாரம் தற்போதைய நிலையையும் கடந்து மீண்டும் வீழ்ச்சிப் போக்கில் பயணிப்பது தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

# முஸ்லிம்கள்–சிங்களவரிடையே முறுகலை உருவாக்க ஹெல உறுமய முயற்சி

## -தேசிய முஸ்லிம் காங்கிரஸ் கண்டனம்

நாட்டில் முஸ்லிம்களுக்கும், சிங்களவர்களுக்கும் இடையில் முறுகலை ஏற்படுத்த ஜாதிக ஹெல உறுமய முயற்சிப்பதாக தேசிய முஸ்லிம் காங்கிரஸ் குற்றம் சுமத்தியுள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக மாநாட்டில் கருத்துரைத்த தேசிய முஸ்லிம் காங்கிரஸின் செயலரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எச்.எம்.எம் ஹரிஸ் மற்றும் காங்கிரஸின் பிரதித் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.எம் அஸீஸ்ும் இந்தக் குற்றச்சாட்டை சுமத்தினார்கள்.

பொத்துவில் சின்ன உல்ல பகுதியில் அமைக்கப்பட்டுள்ள புத்தர் சிலையானது அங்கு 99 வீதமாக வாழும் முஸ்லிம்கள் மத்தியில் பதற்றத்தை கொண்டு வந்துள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை இந்தச் சம்பவத்தை ஒட்டியதாக இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்துக்கு முஸ்லிம் இயக்கங்கள் காரணம் எனக் கூறப்பட்டமையானது முஸ்லிம்களை பாதிக்கும் விடயமாகும்.

தலிபான் மற்றும் அல்ஹைதா போன்ற அமைப்புகள் கிழக்கு மாகாணத்தில் செயற்படுவதாகக் குற்றம் சுமத்தப்பட்டமையும் இதனை அடிப்படையாகக் கொண்டு கொழும்பில் ஜாதிக ஹெல உறுமய ஆர்ப்பாட்டம் நடத்தியமையும் கண்டிக்கத் தக்கவையாகும்.

இதற்கு மேலாக நேற்றுமுன் தினம் நோர்வேயின் சமாதான தூதர் எரிக்சூல்ஹெய்முடனான சந்திப்பின் போது கிழக்கு மாகாண படைத்தளபதிகள் கிழக்கில் முஸ்லிம் ஆயுதக்குழுக்கள் செயற்படுவதாக தெரிவித்துள்ளமையானது வேண்டுமென்றே முஸ்லிம் இளைஞர்களை பாதிப்புக்கு இட்டுச்செல்லும் நடவடிக்கையாகும் என்றும் இன்றைய ஊடக மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது. அமைச்சர் ஏ.எல்.எம் அத்தாவுல்லாவின் தொகுதியாக பொத்துவில் அமைந்துள்ள போதும் அவர் இந்த புத்தர் சிலை விடயத்தில் கருத்து எதனையும் தெரிவிக்கவில்லை,

அதேநேரம் ஆழிப்பேரலையின் பின்னர் அமைச்சர் அத்தாவுல்லா தமது கிழக்கு உட்கட்டமைப்பு அமைச்சின் கீழ் எந்த புனரமைப்புக்களையும் மேற்கொள்ளவில்லை என்றும் நேற்றைய மாநாட்டில் குற்றம் சுமத்தப்பட்டது. (32)

# லங்காதீப ஊடகவியலாளர் கைதை ஆட்சேபித்து புத்தளத்தில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

லங்காதீப ஊடகவியலாளர் இரான் பிரியங்கர ஜெயசிங்க கைது செய்யப்பட்டமையை ஆட்சேபித்து புத்தளத்தில் நேற்று ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

புத்தளம் பேருந்து தரிப்பிடத்தில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கும் அதிகமான ஊடகவியலாளர்கள் பங்கேற்றனர்.

இதேவேளை கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்ட லங்காதீப ஊடகவியலாளர் தொடர்பான வழக்கு நேற்று புத்தளம் நீதிமன்றத்தில் நடைபெற்றது.

இதன்போது பொலிசாரிடம் கைது செய்யப்பட்ட லங்காதீப ஊடகவியலாளரின் புகைப்படக் கருவியை அவரிடமே ஒப்படைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

அத்துடன் வழக்கை எதிர்வரும் ஏழாம் மாதம் 23 ஆம் திகதிக்கு அவர் ஒத்திவைத்தார். பாராளுமன்ற உறுப்பினர் ரங்கே பண்டாரவினால் அமைக்கப்பட்டு வரும் கட்டடம் ஒன்றை படம் பிடித்ததாகக் குற்றம் சுமத்தியே குறிப்பிட்ட ஊடகவியலாளர் கைது செய்யப்பட்டதாகப் பொலிசார் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

# முதலாம் ஆண்டில் மாணவர்களைச் சேர்க்க இருநூறு பாடசாலைகளில் முறைகேடு

## சனாதிபதி ஆணைக்குழு விசாரணை

(கொழும்பு)

முதலாம் ஆண்டுக்கான மாணவர் சேர்ப்பில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படும் சுமார் 200 பாடசாலைகள் தொடர்பில் சனாதிபதி ஆணைக்குழு விசாரணைகளை நடத்திவருகிறது.

அதேவேளை கொழும்பு டீ.எஸ்.சேனாநாயக்க வித்தியாலய அதிபர் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

முதலாம் ஆண்டுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதில் ஊழல்கள் இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டின் பேரிலேயே இந்தப் பணி இடை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரையின் பேரிலேயே இவர் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

இதனையடுத்து இவரின் இடத்திற்கு ரோயல் கல்லூரியின் உப அதிபர் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏற்கனவே ஆனந்தா கண்டி கிங்ஸ்வூட், குருநாகல் மலியதேவ மகளிர் கல்லூரி, மீனுவாங்கொட நாலந்த மகளிர் கல்லூரி ஆகியவற்றின் அதிபர்களும் இதே குற்றத்திற்காக பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

(32)

# சாஸ்திரிகூளாங்குளம் நலன்புரி நிலைய மக்கள் வசிப்பிடமின்றி அவலம்!

(செட்டிகுளம்)

வவுனியா சாஸ்த்திரிகூளாங்குளம் பகுதியில் அமைந்துள்ள நலன்புரி நிலையத்தில் வாழ்ந்து வரும் மக்கள் பல்வேறு சிரமங்களின் மத்தியில் வாழ்ந்து வருவதாக அந்த மக்கள் தெரிவிக்கின்றனர். 1997 ஆண்டு ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கையின் போது ஓமந்தையின் கள்ளிகுளம், பரநாட்டாங்கல், சிதம்பரம் ஆகிய பகுதிகளில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்து கடந்த ஆறு வருடங்களாக இந்த நலன்புரி நிலையத்தில் வாழ்ந்து வருகின்றனர். 38 குடும்பங்களைச் சேர்ந்த இந்த மக்கள் தமது சொந்த இடங்களில் குடியமர்த்துமாறு தொடர்ந்து வரும் அதிகாரிகளிடம் கேட்பதாகவும், ஆனாலும் இன்றுவரை இராணுவம் நிலை கொண்டு இருப்பதால் தமது கிராமங்களுக்கு கூட செல்ல முடியாத நிலை இருப்பதாகவும் அந்த மக்கள் தெரிவிக்கின்றனர். ஏற்கனவே சேவாலங்கா நிறுவனம் உதவிசெய்து வந்த போதும் அவர்களின் சேவையாற்றும் கால எல்லை முடிவடைந்ததன் காரணமாக அவர்கள் தற்போது உதவிகள் எதனையும் செய்வது இல்லை என்றும் இதன் காரணமாக வீடுகள் அனைத்தும் படுமோசமாக சேதம் அடைந்திருப்பதாகவும் மழை நேரங்களில் சிறு பிள்ளைகளுடன வாழ்வது பெரும் சிரமமாக இருப்பதாகவும் அந்த மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். நிவாரண பொருட்கள் நேரகாலத்திற்கு வழங்கப்படுவது இல்லை. தம்மை தமது சொந்த இடத்தில் குடியமர்த்த வேண்டும் அல்லது வீட்டுத் திட்டம் ஒன்று நிறுவித்தருமாறு அந்த இடத்தில் தம்மையும் குடியமர்த்துமாறு சாஸ்த்திரிகூளாங்குள மக்கள் கோருகின்றனர். (21)

## குற்றச்சாட்டு

ஐக்கிய தேசிய கட்சித் தலைவர் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் முக்கியஸ்தர்கள் இடையில் பிளவுகளை ஏற்படுத்த முனைவதாக ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர குற்றம் சுமத்தியுள்ளார். சனாதிபதிக்கும், தனக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதாக தனக்கு நெருக்கமான தனியார் ஊடகங்கள் வாயிலாக ரணில் விக்கிரமசிங்க பொய்யான பரப்புரைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் குற்றம் சாட்டினார். (32)

# பொதுக்கட்டமைப்பை விரைவில் உருவாக்க அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு றொக்காவிடம் வலியுறுத்து

(கொழும்பு)

சுனாமி அனர்த்தம் தொடர்பான நிவாரணப் பணிகளுக்கு பொதுக்கட்டமைப்பு அமைப்பதை சிறிலங்கா அரசு விரைவுபடுத்த அமெரிக்கா அழுத்தம் கொடுக்க வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமெரிக்காவின் தெற்காசிய பிராந்தியத்துக்கான துணை செயலர் கிறிஸ்டினா றொக்காவிடம் நேற்று வலியுறுத்தியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் தலைமையில் இடம் பெற்ற இச்சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் பங்குபற்றினார்.

இது குறித்து இரா. சம்பந்தன் பி.பி.சி. தமிழோசைக்கு தெரிவிக்கையில்

சுனாமி அனர்த்தம் ஏற்பட்ட பின்னர் வடக்கு-கிழக்கில் சுனாமி அனர்த்தப் பணிகளை மேற்கொள்வதற்கு விரைவில் ஒரு கட்டமைப்பு அமைக்கப்படும் என்று எதிர்பார்த்தோம். ஆனால், அது ஏற்படுத்தப்பட வில்லை. இந்தக் கட்டமைப்பு வரும் என்று எம்மால் கூறமுடியாது. வரக்கூடிய நிலைமை நாட்டில் இல்லை. ஏனெனில் அரசாங்கத்தின் முக்கியமான பங்காளியான ஜே.வி.பி. இவ்விதமான கட்டமைப்பு ஏற்படுவதை மிகவும் தீவிர மாக எதிர்த்து வருகின்றது. ஆனாபடியினால், உங்கள் செல்வாக்கை நீங்கள் பயன்படுத்தி இந்தக் கட்டமைப்பை விரைவில் ஏற்படுத்த வேண்டும். இந்தச் சமாதான முயற்சி இறுதியில் ஒரு நல்ல வெற்றியைக்காண வேண்டுமென சர்வதேச சமூகம் விரும்பினால் விசேடமாக நீங்கள் விரும்பினால் இவ்விதமாக ஒரு கட்டமைப்பை ஏற்படுத்தி தமிழீழ விடுதலைப் புலிகளை ஒரு பங்காளியாக்கி சுனாமி சம்பந்தமான கருமங்களை முன்னெடுப்பதற்கு முயற்சி எடுக்கப் படவேண்டியது அத்தியாவசியம். இனிமேலும் பிற் போடக்கூடாது என்று நாங்கள் தெளிவாகக் கூறினோம் என்றார்.

சர்வதேச சமூகத்தினுடைய நிவாரண உதவிகள் உங்களுக்கு வந்து சேர்கின்றதா என்று றொக்கா அவர்கள் கேட்டார்கள்.

நாங்கள் கூறினோம். ஆரம்பத்தில் மனிதாபிமான அடிப்படையில் சர்வதேச சமூகத்தால் விசேடமாக அரச சார்பற்ற சர்வதேச நிறுவனங்களால் பலவிதமான உதவிகள் செய்யப்பட்டன. ஆனால், தற்போது சர்வதேச சமூகத்தின் பங்களிப்பு மிகவும் குறைவாக இருக்கின்றது. காரணம் என்னவெனில், எல்லோரும் இந்தக் கட்டமைப்பு ஏற்படுத்தப் பட வேண்டும். இந்தக் கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்ட பின்னர் தான் இந்தக் கருமங்களில் நாங்கள் கூடிய அக்கறை செலுத்தலாம் என்ற கருத்து இருப்பதைப்போல் தோன்றுகின்றது.

இதன் அடிப்படையில் சர்வதேச சமூகம் கொஞ்சம் கொஞ்சமாக பின்னிக்கின்றார்கள். ஆனபடியால், இந்த மாதிரியான விடயங்களை கருத்தில் கொண்டு இந்தக் கட்டமைப்பை விரைவில் ஏற்படுத்துவதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்யவேண்டும்.என கிறிஸ்ரீனா றொக்காவிடம் நாங்கள் கூறினோம்.

தங்களுடைய நிலைப்பாடும் கூட்டமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதே எனக் கூறிய றொக்கா அம்மையார் கூட்டமைப்பு ஏற்படுவதன் மூலமாகத்தான் இந்தச் சமாதான முயற்சியை முறையாக முன்னெடுக்கலாம் என்பதிலும் அவர்கள் மிகவும் உறுதியாக இருக கிறார்கள். அவர்கள் அந்தக் கருத்துக்களை எங்களுக்குத் தெளிவாகக் கூறி இருந்தார்.

விடுதலைப் புலிகள் அரசியல் பாதையில் தொடர வேண்டும் என்று றொக்கா அம்மையார் கூறினார்.

கிறிஸ்ரீனா றொக்காவின் கருத்துக்களில் இருந்தும் அமெரிக்கத் தூதுவர் நெப்ரி லான்ஸ்பேட்டின் கருத்துக்களில் இருந்தும் நாங்கள் அவதானிக்கக் கூடியதாக இருந்தது என்னவெனில் அவர்கள் தமிழர்களின் நிலைப்பாட்டை கூடுதலாகப் புரிந்தவர்களாக இருந்தார்கள் என்றும் சம்பந்தன் தெரிவித்தார்.

## கண்சிகிச்சை பிற்போடப்பட்டது

(அலுவலக செய்தியாளர்)

புதுக்குடியிருப்பு டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவ மனையில் எதிர்வரும் 23,24ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த கண் சத்திரசிகிச்சை தவிர்க்கமுடியாத காரணத்தினால் அன்றைய தினங்களில் நடைபெறமாட்டாதென மருத்துவமனையினர் தெரிவித்துள்ளனர்.

மேற்படி கண்சத்திரசிகிச்சை எதிர்வரும் 30,01ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதெனவும் சிகிச்சை பெற விரும்புபவர்கள் புதுக்குடியிருப்பு டாக்டர் பொன்னம்பலம் மருத்துவ மனையுடன் தொடர்பு கொள்ளும் வண்ணம் மருத்துவமனை நிர்வாகத்தினர் வேண்டியுள்ளனர். (சோ)

## சிற்றூர்தி சேவைகள் நிறுத்தம் பொதுமக்கள் பெரும் நெருக்கடி

(நல்லூர்)

தனியார் சிற்றூர்தி சேவைகள் யாழ்.குடாநாட்டில் நேற்றைய தினம் இடம்பெறாமையால் பொது மக்கள் பெரும் நெருக்கடிக்கு உள்ளாக்கப்பட்டனர்.

யாழ்குடாநாட்டின் பிரதான பாதைகளில் நாளொன்றுக்கு சுமார் நானூறுக்கு மேற்பட்ட சிற்றூர்திகள் சேவையில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இருபாலைச் சந்தியில் கடந்த சிலநாட்களுக்கு முன்னர் இடம்பெற்ற விபத்தின்போது முகமாலைப்பாதைக்கான சிற்றூர்தி தீயிட்டுக்கொளுத்தப்பட்டமையைக் கண்டித்து எதிர்காலத்தில் இத்த கைய மூன்றாம் நபர்களின் அடாவடித்தனமான செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் எனக் கோரி இந்நடவடிக்கையை தனியார் சிற்றூர்தி சேவைச்சங்கத்தினர் மேற்கொண்டமை குறிப்பிடத் தக்கதாகும். தனியார் சிற்றூர்திகள் நேற்று சேவையில் ஈடுபடாமையால் பிரயாணிகளும், மாணவர்களும் பெரும் சிரமங்களை அனுபவித்தனர். வட பிராந்திய போக்கு வரத்துச்சபையினரிடமும் போதிய பேருந்துகள் இன்மையால் முழுமையான சேவையை வழங்க முடியாத நிலைமை காணப்பட்டது. (41,கா)

## கிளிநொச்சியில் வாராந்த சந்தை 25 முதல் செயற்பட ஏற்பாடு

(அலுவலக செய்தியாளர்)

விவசாயம் மற்றும் கடல் சார் உற்பத்தியாளர்களின் நன்மை கருதி வாராந்த சந்தை நடைமுறைப்படுத்தப்படவுள்ளதென கிளிநொச்சி மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவன செய்திக்குறிப்பின் மூலம் தெரியவந்துள்ளது.

எதிர்வரும் 25 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதான வளாகத்தில் மேற்படி வாராந்த சந்தை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதெனவும் விவசாயம் மற்றும் கடல்சார் உற்பத்தியாளர்களும் தங்கள் உற்பத்திப்பொருட்களை இச்சந்தைமூலம் சந்தைப்படுத்தி பயனடைய முடியுமென இச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப் பெற்றுள்ளது.

இருதசாப்தங்களுக்கு மேலாக அதாவது 1983 ஆம் ஆண்டிற்குப் பின்பு மீண்டும் மேற்படி வாராந்த சந்தை கிளிநொச்சியில் நடைமுறைப படுத்தப்படுவதன் காரணமாக இப்பகுதி விவசாயிகள், கடல் சார் உற்பத்தியாளர்கள் நன்மையடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(சோ)

## கொள்ளுப்பிட்டியில் கைக்குண்டுவீச்சு!

### மூவர் காயம்

கொழும்பு கொள்ளுப்பிட்டியில் விடுதி ஒன்றின் முன் நேற்றிரவு இடம்பெற்ற கைக்குண்டு வீச்சில் மூவர் காயமடைந்தனர். வாகனமொன்று சேதமடைந்தது.இரவு 10.55 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவம் தனிப்பட்ட பகை காரணமாக இடம்பெற்றிருக்கலாமென பொலிசார் தெரிவிக்கின்றனர்.

## மூன்று முஸ்லிம் கட்சிகள் கூட்டிணைய இணக்கம்

ஐக்கிய முஸ்லிம் மக்கள் கூட்டமைப்பு, சிறிலங்கா முஸ்லிம் கட்சி மற்றும் ஜனநாயக ஐக்கிய முன்னணி எனப்படும் நுவா ஆகியன இணைந்து புதிய கூட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்தவுள்ளன.

இதற்கான பேச்சுவார்த்தைகள் தற்சமயம் இடம்பெற்று வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தைகளில் ஐக்கிய முஸ்லிம் மக்கள் கூட்டமைப்பின் சார்பில் நிசார் மௌலானா, முஸ்லிம் கட்சி சார்பாக அப்துல் ரசூல், நுவா சார்பாக நஸீர் அகமட் ஆகியோர் பங்கேற்று வருகின்றனர்.

இந்த நிலையில் குறிப்பிட்ட மூன்று கட்சிகளும் இணைந்து முஸ்லிம் தேசியகூட்டமைப்பு என்ற அமைப்பை உருவாக்க கொள்கை இணக்கம் காணப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்காவில் பதிவு செய்யப்பட்ட நான்கு முஸ்லிம் கட்சிகளில் மூன்று கட்சிகள் புதியகூட்டமைப்பில் இணைவது இங்கு குறிப்பிடத் தக்கது.

## இன்று அவசர சந்திப்பு

துணுக்காய் பிரதேசத்தில் மேதினம் தொடர்பான அவரச சந்திப்பு இன்று பிற்பகல் 2.00 மணிக்கு துணுககாய்பிரதேச அரசியல் துறைச் செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

பிரதேசத்திற்குட்பட்ட கிராம அபிவிருத்திசங்கங்கள், கமக்கார அமைபபினர்,கோவில்நிர்வாகத்தினர், சன சமூக நிலையங்கள், தொழிற் சங்கங்கள், அரசஅரசசார்பற்ற நிறுவனங்கள், விளையாட்டுக்கழகங்களை இச்சந்திப்பில் கலந்து கொளளுமாறு துணுக்காய் அரசியல் துறையினர் கேட்டுள்ளனர். (24)

## ஐரோப்பிய பயண...

சந்திப்பினை முடித்துக் கொண்டு அங்கிருந்து விசேட உலங்குவானூர்தி மூலம் காலை 11.00 மணியளவில் கிளிநொச்சிக்கு வருகை தந்துள்ளனர்.

கிளிநொச்சிக்கு வருகை தந்த அரசியல்துறைப் பொறுப்பாளரை அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன், நீதி நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா, மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம், அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி, மருத்துவப் பொறுப்பாளர் றேகா, விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா ஆகியோர் வரவேற்றனர்.

அரசியல்துறைப் பொறுப்பாளருடன் மகளிர் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் தமிழ்விழி, ஜோர்ஜ் ஆகியோரும் வந்துள்ளனர். (கு,தீ)

## சுனாமி...

இந்த நிலையில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழ்த் தேசிய பாராளுமன்ற உறுப்பினர்களை கொண்டு சுனாமி புனரமைப்புகளை செயற்படுத்தலாம்.

அவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகளின் குரலாக ஏற்றுக்கொண்டு இந்தப் பணிகளை அவர்கள் மூலம் செயற்படுத்த முடியுமென ஜே.வி.பினர் தெரிவித்தனர்.

அரசாங்கம் தற்சமயம் மேற்கொண்டு வருகின்ற சுனாமிக்கு பின்னரான புனரமைப்புகள் தொடர்பில் பாரிய குற்றச்சாட்டுகள் எவையும் எழவில்லை என ஜே.வி.பினர் அமெரிக்காவின் தெற்காசிய பிரதி ராஜாங்க செயலரிடம் தெரிவித்துள்ளனர்.

தாம் மாகாண சபைத்திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தமைக்கு 'அதில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டமையே காரணமாகுமென ஜே.வி.பினர் குறிப்பிட்டனர்.

இதேவேளை தமிழீழ விடுதலைப்புலிகளை ஜனநாயக வழிக்கு கொண்டுவர பொதுக்கட்டமைப்பு உதவுமென தாம் நம்பிக்கை கொண்டிருப்பதாக இதன் போது கிறிஸ்டினா றொக்கா தெரிவித்துள்ளார்.

எனினும் அதற்கு அமெரிக்கா உறுதி வழங்க முடியுமா என இதன் போது ஜே.வி.பி. கேள்வி எழுப்பியதாகவும் அதற்கு கிறிஸ்டினா றொக்கா எந்தவித உறுதிமொழியையும் வழங்கவில்லை என ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் பொதுக்கட்டமைப்புக்கு பதிலாகமாற்று யோசனை அடங்கிய ஆவணம் ஒன்றையும் ஜே.வி.பினர் கிறிஸ்டினா றொக்காவிடம் வழங்கினர்.

இதேவேளை பொதுக்கட்டமைப்பு பற்றி அரசு இன்னமும் இணங்கவில்லையெனவும் இதனால் ஜே.வி.பி. அரசில் இருந்து விலகுவது பற்றிய கேள்விக்கே இடமில்லை எனவும் ஜே.வி.பி. அமைச்சர் விஜித ஹேரத் கூறியுள்ளார்.

இவர் பி.பி.சியின் சிங்கள சேவையான சந்தேசியவிற்கு கூறுகையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். கட்டமைப்புக் குறித்து எவ்வித இணக்கமும் ஏற்படுவதற்கு முன்னர் கூட்டணிக்கட்சிகளுடன் கலந்து பேசப்போவதாக சனாதிபதி தங்களுக்கு உறுதிவழங்கி உள்ளதாகவும் கூறிய அவர் இந்த விவகாரம் தொடர்பாகச் கூட்டணி அரசில் இருந்து விலகுவதென தாங்கள் எந்த முடிவும் எடுக்கவில்லை எனவும் அவர் சந்தேசியவுக்கு வழங்கிய செவ்வியில் வலியுறுத்திக்கூறியுள்ளார். (32)

## தமிழீழ...

டால் காஷ்மீர் தீவிரவாத உணர்வு தமிழ்நாட்டில் உருவாவதை உங்களால் தடுக்க முடியாது என்று நேரிடையாகவே அவரிடம் கூறினேன் எனறும் இந்த ஒப்பந்தம் மூலம் தமிழீழத் தமிழர் பிரச்சினையில் இந்தியா இன்னொரு தவறைச் செய்துவிடக்கூடாது என்று எச்சரித்தேன் என்றும் வைகோ கூறினார்.ஈழத்தமிழர்கள் தமிழ்த் தேசியத்தைக் காக்க போர்க் களத்திலே நிற்கிறார்கள். அவர்கள் வெல்வார்கள். அவரது போராட்டம் வெல்லும். அந்தப் போராட்டம் வெல்வது வரலாற்றின் கட்டாயம் என்றும் பலத்த நீண்டநேர கரவொலிகளுக்கிடையே வைகோ கூறினார்.

## திலீபன்...

பாடசாலை ஆசிரியர் தர்மபூபதி நிகழ்த்தினார். கருத்துரைகளை முல்லை.மாவட்ட அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் செல்வி செ.வேழினி மல்லாவி பிரதேச மாதர் சங்கத் [illegible]வி, துணுக்காய் பிரதேச தேசிய [illegible]ச்சிப்பேரவை செயலாளர், ஐயன்கன்குள கிராமசேவையாளர் ஆகியோர் வழங்கினார்கள். சிறப்புரையை அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஆற்றினார்.

இதன்போது நினைவுக் கேடயத்தினை முன்னாள் கிராமசேவையாளர் நாகபாதம், தமிழீழ அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கனிடம் கையளித்தார்.

இந்நிகழ்வின்போது தமிழீழ மருத்துவப் பிரிவைச் சேர்ந்த நாயகத்தினால் பரிசில்களும் வழங்கப் பட்டன. இதன்போது பாடசாலை மாணவர்களது அரங்க நிகழ்வும் பேபி ஆசிரியரின் நெறியாள்கையிலான சங்க நாதம் நாடகமும் இடம் பெற்றது. (24)

## புலிகளிடம்...

மனை வீதிவழியாக மாவட்டச் செயலகத்தை வந்தடையவுள்ளதாகவும், அங்கு மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்றை கையளிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (18)

## ஐரோப்பிய...

இடையில் அமைப்பதாக உத்தேசிக்கப்பட்ட பொதுக்கட்டமைப்பு விவகாரத்தில் இரு தரப்பும் நெருங்கி வந்துள்ளனர்.

இவ் ஒப்பந்தம் இரண்டு, மூன்று அல்லது நான்கு வாரங்களுக்குள் நிறைவாகும் சாத்தியம் காணப்படுவதாக நான் நம்புகின்றேன். முழுமையான இணக்கப்பாடு காணப்பட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட முன்னர் சில விடயங்கள் தீர்க்கப்பட வேண்டியுள்ளன என்றும் அவர் கூறியுள்ளார். அவர் மேலும் கூறுகையில் தமிழ்ச்செல்வனுடன் நடத்திய பேச்சுக்களின் போது இது பற்றிக் கலந்துரையாடியதாகவும் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்கள் மற்றும் ஏனைய தலைவர்களுடனும் கலந்தாலோசித்த பின்னர் புலிகள் இது பற்றிச் சாதகமான முடிவுகளை, சமிக்கைகளை வெளியிடுவார்களென தான் நம்புவதாகவும் எரிக் சூல் ஹெய்ம் கூறினார். (32)

## சமாதான...

யில்,இலங்கையின் சமாதான முன்னெடுப்புக்கள் குறித்து அரசாங்கம் ஒரே குரலில் பேச வேண்டும். சமாதான முயற்சிகள் தொடர்பில் சிறிலங்கா அரசாங்கம் ஒரே கருத்தினைக் கொண்டிருக்க வேண்டும் அரசாங்கத்திற்குள் மாறுபட்ட கருத்துக்கள் நிலவும் போது நிலையான சமாதானத்தை அடைய முடியாது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (32)

## அரசாங்கத்தின்...

படுகிறது.

சந்திப்பை முடித்துக் கொண்டு கிளிநொச்சி திரும்பியுள்ள அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வன் அவர்கள் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களைச் சந்தித்து இது குறித்து கலந்துரையாடிய பின்னரே தமது நிலைப்பாட்டை விடுதலைப்புலிகள் வெளியிடுவார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது